2017 மே 10
புதன்
விலை: 20/-
ஹிஜ்ரி 1438 ஷஃபான் பிறை 13 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 070
NAVAMANI DAILY
නවමණි දිනපතා
QD/154/NEWS/2017
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமா...



07 »

## பிரான்ஸின் அடுத்த நெப்போலியன்



04 »

## நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதா?



12 »

## ஈரானில் வசிக்கும் போலி மெஸ்ஸி

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

## ஜனாதிபதி, பிரதமர் இணக்கம்

■ அ. அருண் பிரசாந்த்

நல்லாட்சி அமைச்சரவையில் வெகுவிரைவிலேயே மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கம் தெரிவித்து விட்டனர் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதேநேரம், சுதந்திரக் கட்சியிலிருந்து அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் ஒருவரை நியமிக்கவும் ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என்று அவர் கூறினார்.

மருதானையில் அமைந்துள்ள சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்

11 »»»»»





## கீதாவின் எம்.பி. பதவி இரத்து:

# உயர் நீதிமன்ற வழக்கால் சட்ட சிக்கல்

■ அ. அருண் பிரசாந்த்

மேன்முறையீட்டு நீதிமன்றினால் பாராளுமன்ற உறுப்பினராக நீடிக்க முடியாது என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளமையை அடுத்து காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கீதா குமார சிங்கவினால் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவினால் சட்டச் சிக்கல் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அரசியல் வட்டாரத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது.

அதாவது இவரின் இந்த மனு உயர்நீதிமன்றினால் ஏற்றுக் கொள்ளப் படுமானால் இவரால் தொடர்ச்சியாக பாராளுமன்ற

11 »»»»»



# கீதாவின் இடத்துக்கு பியசேன கமகே

■ அ. அருண் பிரசாந்த்



கீதா குமாரசிங்கவின் பாராளுமன்ற உறுப்பினர் ஆசனத்துக்கு முன்னாள் தேசிய வளங்கள் அமைச்சரான பியசேன கமகே நியமிக்கப்படுவார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இரட்டை பிரஜாவுரிமை கொண்ட கீதா குமாரசிங்க, பாராளுமன்ற உறுப்பினராக நீடிக்க தகுதியற்றவர் என்று கடந்த புதன்கிழமையன்று மேன்முறையீட்டு நீதிமன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டது.

எனினும், அதற்கு அடுத்த தினமான வியாழக்கிழமை கீதா

11 »»»»»

# கல்முனை வீடமைப்பு காரியாலயம் இடம்மாறாது

## றிஷாதிடம் சஜித் உறுதி

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கல்முனைக் கிளைக் காரியாலயத்தை ஒரு போதும் இடமாற்றப் போதில்லை என்று அமைச்சர் சஜித் பிரேமதாச, அமைச்சர் றிஷாத் பதியுதீனிடம் நேற்று (2017.05.09) காலை உறுதியளித்தார்.

அமைச்சரவைக் கூட்டம் முடிவடைந்த பின்னர் அமைச்சர் சஜித்பிரேமதாசவை சந்தித்த அவர் இந்தக் கிளைக்

11 »»»»»





## இலங்கை நாணயத்தில் அர்ஜுனின் கையெழுத்து

### சட்டத்துக்கு முரண்: வழக்கு தாக்கல்



■ அ. அருண் பிரசாந்த்

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனரான அர்ஜுன மகேந்திரன் இலங்கை பிரஜையாக இல்லாத நிலையில் இலங்கையின் நாணயத்தில் அவரின் கையெழுத்து பயன்படுத்தப்பட்டிருப்பது சட்டத்துக்கு புறம்பானது

11 »»»»»

# 5 மாத காலப்பகுதியில் 42,000 பேருக்கு டெங்கு

## 90 பேர் மரணம்



நாடளாவிய ரீதியில் கடந்த 5 மாத காலப்பகுதிக்குள் 42,141 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இதுவரையில் இந்நோய்த்தாக்கத்துக்குள்ளாகி 90 பேர் இறந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளதாகவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

11 »»»»»

### உள்ளகப் பொறிமுறை;

# சர்வதேச நீதிபதிகளை உள்வாங்குவது நம்பகத்தன்மை மிக்கது

## சந்திரிகா குமாரதுங்க



■ அ. அருண் பிரசாந்த்

போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான உள்ளகப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதி ஒரு சிலரை உள்ளடக்குவதானது தெளிவானதும் நம்பிக்கைதன்மை பொருந்தியதுமாக

11 »»»»»

### மோடி வருகையையொட்டி;

# கொழும்பில் விஷேட போக்குவரத்து ஒழுங்குகள்



■ பா.மலரம்பிகை

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் காரணமாக தலைநகரின் விசேட போக்குவரத்துத் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, இந்தியப்

11 »»»»»

# முஸ்லிம்களுக்கு எதிரான போராட்டம் முடியவில்லை

### ஞானசார தேரர்

■ பீ.எப்.எம் றிஷாட்

புத்தரே தமது அமைப்பின் தலைவர் எனவும், அவர் சுட்டிக்காட்டிய வழியிலேயே

11 »»»»»

# தேர்தலுக்கு தயாராகுங்கள்

## ரணில் வேண்டுகோள்

தேர்தல்களுக்குத் தயாராகும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிறிகொதாவில் ஐ.தே.க.வின் செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், கூடுதல் பொறுப்புணர்வுடன் கூடிய கட்சியாக இளைஞர்களின் பங்களிப்புடன் ஐ.தே.க.வை பரந்துபட்ட அளவில் நவீனமயப்படுத்த வேண்டும்.

அமைச்சர்கள் தமது தொகுதிகளில் அதிகளவு

11 »»»»»

# அவதூறுகள், போலிக்குற்றச்சாட்டுக்களால் முதலமைச்சர் நஸீரின் சேவையை நிறுத்தமுடியாது

## மாகாண சபை உறுப்பினர் லாஹிர்

அவதூறுகளாலும் ஆதாரமற்ற போலிக்குற்றச்சாட்டுக்களாலும் முதலமைச்சரின் சேவைகளை நிறுத்தி விடலாம் என எண்ணுவது சிறுபிள்ளைத் தனமான எண்ணமாகும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். லாஹிர் தெரிவித்துள்ளார்.

தாம் பதவியிலிருக்கும் காலப் பகுதிகளில் மக்களுக்கு எவ்வித சேவைகளையும் செய்யாது கட்சியை சிதைத்து விட்டு இன்று மக்களுக்கு சேவை செய்பவர்களினால் தமது எதிர்ப்பு அரசியல் சூனியமாகிவிடும் என்ற அச்சத்தினால் சில கத்துக்குட்டி அரசியல்வாதிகள் முதலமைச்சர் குறித்து விமர்சனங்களை முன்வைக்க முனைவதாகவும் சட்டத்தரணி லாஹிர் தெரிவித்தார்,

மூதூரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அன்சில் முதலமைச்சர் குறித்து தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளித்து கருத்து தெரிவிக்கையிலேயே கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி லாஹிர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் லாஹிர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் மீது இதற்கு முன்னர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எழுதப்பட்டிருந்த தாருஸ்ஸலாம் மறைக்கப்பட்ட உண்மைகள் என்ற புத்தகத்தை மக்களும் முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளும் புறக்கணித்திருந்தனர் என்பதை அன்சில் அவர்களே தமது கருத்துக்களினூடாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

எவ்வாறாயினும் நாம் இது குறித்த விடயங்களை மக்கள் முன்வைத்திருந்தோம் என்ற அன்சிலின் கூற்றின் ஊடாக அவரும் இந்த முகவரியற்ற புத்தகத்தின் பின்னாலுள்ள கும்பலோடு உள்ளார் என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.இதைத் தான் தவளை தன் வாயால் கெடும் என்பார்கள்,

ஏற்கனவே தாருஸ்ஸலாம் மறைக்கப்பட்ட உண்மைகள் தொடர்பில் கொழும்பு குற்றவியல் தடுப்புப் பிரிவினர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்திடம் விசாரணைகளை நடத்தியுள்ள நிலையில் அன்சிலின் இந்தக் கருத்துடன் அவரும் விசாரணைக் குட்படுத்தப் பட வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம்.



அது மாத்திரமன்றி கிழக்கு முதலமைச்சர் மீது எவ்வித ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்படாமல் செய்யப்பட்டிருக்கும் முறைப்பாட்டை செய்த துவான் நசீர் என்பவர் பஷீர் சேகுதாவூத்தின் ஊடக செயலாளராக முன்னர் பணியாற்றியவர் என்பதன் ஊடாக இந்த முறைப்பாட்டின் பின்னால் உள்ளவர்கள் யார் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள முடியும். மக்களிடம் போலி குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவை எடுபடாது ஏமாந்து போன நிலையில் இன்று எவ்வித ஆதாரங்களுமின்றி முறைப்பாடொன்றை பதிவு செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள நிலையில் நீதிமன்றம் தற்போது அதற்கான ஆதாரங்களை கோரியுள்ளது.

அது மாத்திரமன்றி எவ்வித வழக்கொன்றும் பதிவு செய்யப்படாத நிலையில் நீதிமன்றத்தின் கீழ் விசாரணைக்குட்படுத்தப்படும் ஒரு விடயத்தில் கிழக்கு முதலமைச்சரை குற்றவாளியாக்கி தவறான தோற்றப்பாட்டை உருவாக்க முயல்வது எத்தகைய பாரிய குற்றம் என்பதை சட்டம் கற்றுள்ளதாக கூறுகின்ற அன்சில் அறிந்திருப்பார் என நம்புகின்றேன்.

அது மாத்திரமன்றி இதுவரை விசாரணைக்குட்படுத்தப்படாத ஒரு வழக்கின் உரிய ஆதாரங்களோ சாட்சிகளோ முன்வைக்கப்படாத நிலையில் அன்சிலே நீதிபதியாகி கிழக்கு முதலமைச்சரை குற்றவாளியாக்கி அவர் தேர்தலில் போட்டியிட முடியுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளதன் மூலம் அடுத்த தேர்தலில் முதலமைச்சரின் வருகை எதிர்க்கூட்டணியை கதிகலங்கச் செய்துள்ளது என்பதை தெளிவாக புலப்படுத்துகின்றது.

ஆனால் ஆதாரங்கள் இன்றி அவதூறு கூறும் அன்சில் மீது வழக்கொன்று பதியப்படுமானால் அடுத்த தேர்தல் அல்ல எந்த தேர்தலிலும் போட்டியிட முடியாதளவு நீதித்துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை ஒரு சட்டத்தரணியாக உறுதியாக கூற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# டெங்கு விழிப்புணர்வு பேரணி





(அட்டாளைச்சேனை எம்.ஏ.றமீஸ்)

அதிகரித்து வரும் டெங்கு நுளம்பினை ஒலுவில் பிரதேசத்திலிருந்து முற்றாக ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் ஒலுவில் அல்-அஸ்ஹர் வித்தியாலயம் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபை ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்த டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி நேற்று(09) ஒலுவில் பிரதேசத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் எஸ்.எம்.பி.எம். அறூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அலாவுதீன், பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் உள்ளிட்ட அக்கரைப்பற்று கல்வி வலய அதிகாரிகள், சுகாதாரத் துறை உத்தியோகத்தர்கள், சமூக மட்டத்தலைவர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

ஒலுவில் அல்-அஸ்ஹர் வித்தியாலய வளாகத்திலிருந்து ஆரம்பமான டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி பிரதேசத்திலுள்ள பல்வேறு வீதிகளுடாகச் சென்று ஒலுவில் பிரதான வீதியில் விஷேட டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுச் செயற்திட்டத்திலும் பங்கு கொண்டனர். இதன்போது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அலாவுதீன் பொதுமக்களுக்கு டெங்கு நோயின் தாக்கம் பற்றியும் அதனை ஒழிப்பதன் அவசியம் பற்றியும் தெளிவு படுத்தினார்.

பெருந்தொகையான மாணவர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இவ்விழிப்புணர்வு ஊர்வலத்தின் போது டெங்கு நோயினை கட்டுப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் அடங்கிய கைகேடுகள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை பிரதேசத்திலுள்ள பொதுமக்களுக்கு மாணவர்கள் வழங்கியமை குறிப்பிடத் தக்கது.

# சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி மே 31

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

இவ்வருடம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி மே மாதம் 31 புதன்கிழமையுடன் நிறைவடைவதாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமென பரீட்சைகள் திணைக்களம் பரீட்சார்த்திகளை அறிவுறுத்தியுள்ளது.புதிய மற்றும் பழைய பாடத் திட்டங்களுக்கு அமைய டிசம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் டிசம்பர் 21 ஆம் திகதி வரை பரீட்சைகள் நடைபெறவுள்ளது.

மேலும், பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான மாதிரி விண்ணப்பப் படிவங்களும், பரீட்சை நிலையங்கள் தொடர்பான விபரங்களும் கடந்த வியாழக்கிழமை (04) வெளியான பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஐயந்த புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

## தொழுகை நேரங்கள்

10.05.2017

| ஸுபஹ் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 4.35 | 12.08 | 3.28 | 6.20 | 7.33 |

கிழக்குமாகாணம் 6 நிமிடங்கள் கழித்து கணிப்பிடவும்

## வெலிகம உலமா சபை ஏற்பாட்டில் கருத்தரங்கு

(வெலிகம நிருபர்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் மாத்தறை மாவட்டம், மற்றும் வெலிகம பிரதேச கிளை ஆகியன இணைந்து வெலிகமவிலுள்ள சகல பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், மற்றும் கதீப்மார்கள், பேஷ் இமாம்களுக்கான விசேட கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இக் கருத்தரங்கு எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு வெலிகம பழைய தெரு மீரா ஸாஹிப் ஜும்ஆப் பள்ளிவாசலில் (மர்கஸ்) நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் மாத்தறை மாவட்டத் தலைவரும் வெலிகம மத்ரஸதுல் பாரி அரபுக் கல்லூரி அதிபருமான அஷ்ஷெய்க் ஏ.ஆர். அப்துர் ரஹ்மான் ஹாபிழ் (மழாஹிரி), மற்றும் வெலிகம ஹிழ்ரிய்யா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் முப்தி நஜ்முத்தீன் (ஹிழ்ரி) ஆகியோர் நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வை சகல பள்ளிவாசல்கள் கதீப்மார்கள், பேஷ் இமாம்கள், மற்றும் நிர்வாகிகள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு வெலிகம கிளை செயலாளர் அஷ்ஷெய்க் எம்.யூ.எம். வாலிஹ் (அஸ்ஹரி) வேண்டிக் கொள்கிறார்.

# நூல் விமர்சனம்

நூலின் பெயர் - 'தலாக், குல்உ, ஃபஸ்கு, இத்தா' எதற்காக? எப்போது? எப்படி?

நூலின் ஆசிரியர் - மௌலவி முஹம்மத் ரஸின் - மழாஹிரீ

நூலின் பக்கம் - 56

நூலின் விலை - 150 ரூபா

நூல் விநியோகஸ்தர் - தாருல் குர்ஆன் பப்ளிசர், இல,100, கண்டி வீதி, மல்லவப்பிட்டிய, குருநாகல்.

தொலைபேசி - 0716859830

திருமணம் என்பது இஸ்லாத்தில் ஒரு வணக்கம், அதன் பெறுபேறு புனிதமான சந்ததி, ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயம், அத்தகைய ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்கவே ஓர் ஆணும், பெண்ணும் ஒப்பந்தத்தின் மூலம் இல்லற வாழ்வில் இணைந்து கொள்ளும் திருமணம் என்ற இந்த கட்டமைப்பை இஸ்லாம் ஆகுமாக்கியுள்ளது என்ற உயரிய கருத்தோடு, இந்நூல் துவக்கம் காணுகிறது. அத்துடன் மனைவியின் கடமைகள், கணவரின் கடமைகள் எவை என்ற விளக்கங்களும் ஆரம்பத்திலேயே இந்நூலில் தரப்படுகின்றது.



மௌலவி முஹம்மத் ரஸின் - மழாஹிரீ இளம் சமூகத்துக்கு வழங்கியுள்ள இந்த நூல் அவரது அறுபத்தி ஐந்தாம்(65) ஆக்கமாகும்.

கணவர், மனைவி இருவரும் இல்லறத்தில் விட்டு கொடுப்புகளுடன் வாழவேண்டும். ஆனால் அதை மீறி இல்லறத்தில் பிணக்குகள் ஏற்படலாம். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் அல்குர்ஆனின் ஒளியில் அப்பிணக்குகளை அணுக ஆறு வழிகாட்டல்கள் இங்கு தரப்படுகிறது. அவற்றை இந்நூலில் தெளிவாக விபரிக்கப்பட்டு வழிகாட்டல் செய்யப்பட்டுள்ளது.

அங்கும் இல்லறத்தில் சுமுகநிலை சாத்தியப்படாத சந்தர்ப்பத்தில் தலாக்-விவாகரத்துக்கு செல்ல அனுமதித்த இஸ்லாம் அங்கும் இருவரும் சேர்ந்து வாழவே மீண்டும் வழிகாட்டல்கள் செய்துள்ளது. தலாக், குல் உ, பஸ்கு ஆகிய விவாகரத்து முறைகளின் வழிகாட்டல்கள் பற்றிய சட்ட தெளிவுகளும் அனைவரும் எளிதாக புரிந்துகொள்ளும் விதமாக இந்த நூலில் தரப்பட்டுள்ளது.

அற்ப சொற்ப விடயங்களுக்காக விவாகரத்துக்கு செல்லக்கூடாது என்பது எச்சரிக்கப்பட்டு பல உண்மைச் சம்பவங்களும் நூலில் ஆங்காங்கே கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று தலாக் சொன்னவரின் சட்டம், முத்தலாக் பற்றி இமாம்களின் கூற்றுகள் தலாகின் வகைகள், தலாக் கூறுவது எப்படி? அது எப்போது நிகழும்? தலாக் சம்பந்தமான சில சட்டங்கள், இத்தாவின் வகை, அதன் கால அளவுகள், மரண இத்தா பற்றிய சில கேள்விகளும், சட்ட தெளிவுகளும், இத்தா பற்றிய விஞ்ஞான விளக்கம் போன்ற தலைப்புகளில் மேலும் நிறைய விவாகரத்து சம்பந்தமான இஸ்லாமிய மார்க்க சட்டங்களும் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமிய மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டவைகளில் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்பானது 'தலாக்' எனும் விவாகரத்தாகும் என்ற வாசகங்களோடு துவங்கும் இந்நூலின் அட்டைப்படம் மிகவும் கவர்ச்சியாக அமைந்துள்ளது. வயது வந்த ஆண் பெண் வாசித்து பயன் பெறவேண்டிய மார்க்கத்தின் சட்டத்தெளிவு நூல்.

- அன்பன்

# வாழைத்தோட்டம் அல்முனீரின் 19 ஆவது வருடாந்த பரிசளிப்பு விழா











(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பு-12, வாழைத்தோட்டம் அல்-மஸ்ஜிதுல் முனீர் மத்ரஸாவின் 19வது வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 07ஆம் திகதி அல்-ஹிக்மா கல்லூரியின் கேட்போர் கூடத்தில் மத்ரஸாவின் தலைவர் ஜஹாங்கிர் அலியின் வழிநடத்தலில் அதிபர் மௌலவி எம்.எம்.எம்.ரவிசுடீன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக இஷாரா எக்ஸ்போர்ட் தனியார் நிறுவனத்தின் தலைவரும் கொழும்பு வர்த்தக சங்கத் தலைவருமான தேசகீர்த்தி வை.எம்.இப்ராஹிமும், விஷேட அதிதியாக அராபியன் என்டர் பிரைஸஸ் எம்.எஸ்.எம்.லாபிர் மற்றும் கௌரவ அதிதிகளாக அம்ஜா ட்ரவல்ஸ் பொது முகாமையாளர் ஏ.எம்.பௌசுல் அமீர், ரேட் ஹவுஸ் உரிமையாளர் எஸ்.எச்.ஏ.வஹாப், முனீர் மத்ரஸாவின் முன்னாள் தலைவர் எம்.பி.எம்.ஏ.லத்தீப், எஸ்.ஐ.நாகூர்கனி ஆகியோரும் பள்ளி நிருவாக சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்ட நிகழ்வில் விஷேட பேச்சாளராக இஷ்ஷாஅரியா அறபுக் கல்லூரியின் உப அதிபர் மௌலவி பறூக்கும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் தலைமையுரையை அதிபர் மௌலவி எம்.எம்.எம்.ரவிசுடீனும், வரவேற்புரையை மத்ரஸாவின் தலைவர் ஜஹாங்கிர் அலியும், நிருவாகம் சார்பான சிறப்புரையை சாமஸ்ரீ லியாகத் அலியும் நன்றியுரையை அசீமும் வழங்கினர்.

இதன்போது மத்ரஸாவினால் நடாத்தப்பட்ட குர்ஆன் மற்றும் இஸ்லாமிய நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவ, மாணவியருக்கு அதிதிகளால் பதக்கங்கள், சான்றிதழ்கள், பரிசில்கள் மற்றும் நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சீனா கருத்தரங்கில் கலந்துகொள்ளும் ஒரேயொரு முஸ்லிம் அதிபர்



கல்வி யமைச்சின் ஏற்பாட்டில் சீனாவில் நடைபெற வுள்ள அதிபர்க ளுக்கான கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தின், கோறளைப்பற்று மேற்கு கல்வி கோட்டத்திற்குட்பட்ட பாடசா லையான ஓட்டமாவடி தாருஸ் உலூம் வித்தியாலயத்தின் அதிபர் எம்.எல். எம்.பைசல் நேற்றையதினம் சீனா பயணமானார்.

சீனாவின் ஜின்குவா, செஜினாங் மாகாணத்திலுள்ள செஜினாங் பல் கலைக்கழகத்தில் முதன்மை மற்றும் மேல்நிலை பாடசாலை ஆசிரியர்களுக்கான அபிவிருத்தி நாடுகள் 2017 எனும் தலைப்பில் நாளை(11) தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள அதிபர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காகவே சென் றுள்ளார்.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளும் கிழக்கு மாகாணத்தினை பிரதிநிதித் துவப்படுத்தி தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு முஸ்லிம் அதிபர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 96 முகவர் நிலையங்களுக்கு ஹஜ்ஜுக்கு அங்கீகாரம்

அடுத்து ஹஜ்ஜுக்காக 96 முகவர் நிலை யங்களுக்கு அரச ஹஜ் குழு அங்கீகாரமளித் துள்ளதாக அரச ஹஜ்குழுவின் தலைவர் டாக்டர் சியாத் தாஹா தெரிவித்தார்.

கடந்தாண்டு வழங்கப்பட்ட அதே எண் ணிக்கையிலான முகவர் நிலையங்களுக்கே இவ்வாண்டும் அங்கீகாரம் வழங்கப்பட் டுள்ளது.

கடந்தாண்டு அங்கீகாரம் வழங்கப்பட்ட நான்கு முகவர் நிலையங்களுக்கு இம்முறை அனுமதி வழங்கப்படவில்லை என்றும் புதிதாக நான்கு முகவர் நிலையங்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் கலாநிதி சியாத் தெரிவித்தார்.

கடந்த ஹஜ்ஜின் போது முறைகேடாக நடந்து கொண்டதாக ஹஜ் யாத்திரிகர்களால் குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு முகவர் நிலையங்களுக்கு இம்முறை அனுமதி வழங் கப்படவில்லை. தெரிவுசெய்யப்பட்டுள்ள முகவர் நிலையங்களுக்கு நேற்று கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதேநேரம், இம்முறை இலங்கையிலிருந்து 2800 பேருக்கு ஹஜ் செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இதுவரை 2400 பேரே ஹஜ் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். ஹஜ்ஜுக்காக விண்ணப்பித்திருந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்டோரில் 7000 பேருக்கு அனுப்பிவைத்த கடிதத்தின்படியே 2400 பேர் தமது விருப்பத்தை முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்துக்கு தெரிவித்துள்ளனர்.

# கழிவு முகாமைத்துவத்துக்கான திட்டங்கள் அறிக்கைகளை தயார் செய்யுங்கள்

### சுற்றாடல்துறை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



கழிவு முகாமைத்துவத்திற்கான எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட வேண்டிய விசாரணை அறிக்கையை துரிதமாக வழங்குமாறும், பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பொலித்தீன் வகைகளை தடை செய்தல் தொடர்பான புதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தை தயாரிக்குமாறும் உரிய துறையினருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி ஆணையாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

கழிவு முகாமைத்துவத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றிற்கான தீர்வுகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக சகல உள்ளூராட்சி ஆணையாளர்களும் ஜனாதிபதியால் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு மாகாணங்களிலும் கழிவு முகாமைத்துவத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள பிரச்சி னைகளை அந்தந்த மாகாணங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி ஆணையாளர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை வகுப்பதற்குரிய ஆலோசனைகளை முன்வைக்குமாறு சகல அமைச்சுக்களுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஜனாதிபதி ஆலோச னை வழங்கினார்.

புத்தளம், அறுவக்கலு பிரதேச த்தில் குப்பைகளை புதைப்பதற்கான செயற்பாடுகளை துரிதப்படுத்தவும் ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, அதற்குரிய விசாரணை அறிக்கையை விரைவில் தனக்கு சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் உள்ள குப்பை மேடுகள் பற்றிய பூரண அறிக்கை தற்போது தயார் செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப 200 குப்பை கொட்டும் இடங்கள் நாடு பூராகவும் காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது. அவற்றுள் 25 இடங்கள் மேல் மாகாணத்தில் காணப்படுவதுடன் மொத்தமாகவுள்ள 200 குப்பை மேடுகளுள் 20 குப்பை மேடுகளில் பிரச்சினைகள் காணப்படுவதாக தெரிய வருகிறது.

மீத்தொட்டமுல்ல குப்பை மேடு பற்றிய அறிக்கை இதன்போது ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. உடனடியாக ஆபத்து ஏற்படக்கூடிய நிலை தற்போது அங்கு காணப்படவில்லை என்றும் எதிர்வரும் மழைகாலத்தை எதிர்நோக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தொழில்நுட்பத்தினூடாக குப்பை மேடு முழுவதையும் நிர்வகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்ச ர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, வஜிர அபேவர்தன, சஜித் பிரேமதாச, பாட்டலி சம்பிக்க ரணவக்க, சாகல ரத்னாயக்க, பைசர் முஸ்தபா ஆகியோரும், மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் ஆகியோரும், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவின் பிரதானிகளும், உள்ளூராட்சி சபை ஆணையாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பேரா. கிழக். பல்கலைகளுக்கு புதிய வேந்தர்கள் நியமனம்





(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுசைன்)

பேராதனை மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கு புதிய வேந்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் வேந்தராக பேராசிரியர் கே.எம்.டி. சில்வா நியமிக்கப்பட்டுள்ளதுடன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக கலாநிதி விவேகானந்த ராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கிவைக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலையின் வேந்தராகப் பதவி வகித்த பேராசிரியை யோகா இராசநாயகத்தின் பதவிக்காலம் ஏற் கெனவே கடந்த 2016 ஆகஸ்ட் மாதம் நிறைவடைந்ததையடுத்து அப்பதவிக்கான வெற்றிடம் நிரப்பப் படாமல் இருந்தது. இதன்காரணமாக கிழக்குப் பல்கலையின் கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி இடம்பெறுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்த அப்பல்கலைக்கழகத்தின் 21வது பொதுப் பட்டமளிப்பு விழாவும் புதிய வேந்தர் நியமனம் இடம்பெறும் வரை காலவரையறையின்றி பிற்போடப் பட்டு வந்தது.

## 2020 ஆம் ஆண்டளவில் டெங்குவை முற்றாக ஒழிக்கலாம்

சுகாதார பிரச்சினையாக உருவெடுத்துள்ள டெங்கு நோயை ஒழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக டெங்கு நோயினால் ஏற்படும் உயிரிழப்புக்கள் 2020 ஆம் ஆண்டளவில் 0.1 வீதமாக குறைவடையவுள்ளதாக டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட வைத்தியர் அஹோஜா வீரசிங்க தெரிவித்தார்.

இதற்கமைவாக டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களை 50 வீதத்தால் குறைக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2017 ஆம் ஆண்டு ஆரம்பமாகி 4 மாதகாலப்பகுதியில் 42 ஆயிரத்து 141 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வெசாக் காலத்தில் பொருட்களுக்கு தட்டுப்பாடில்லை விலையை வேண்டுமென்றே அதிகரித்தால் சட்டநடவடிக்கை

## அமைச்சர் றிஷாத் எச்சரிக்கை

வெசாக் பண்டிகைகாலத்தில் பொருட்களுக்கு எத்தகைய தட்டுப்பாடும் ஏற்படாதவகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பொருட்களின் விலையை அதிகரித்து விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கியுள்ள தாகவும்அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இதேவேளை அத்தியாவசிய உணவுப்பண்டங்கள் இறக்குமதி மற்றும் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஹேமக்க பெர்னாண்டோ, சந்தையில் பொருட்கள் தாராளமாக இருப்பதாக வும் எந்தப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவவில்லை எனவும் உறுதிபடத் தெரிவித்தார்.

கடந்த வெசாக்பண்டிகை காலத் தோடு ஒப்பிடும்போது இந்த வருட பண்டிகை காலத்தில் மொத்த விற்பனைச்சந்தையில் பொருட்களின் விலைகணிசமான அளவு குறைந்துள் ளது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்தவருடம் மே மாதமளவில் பெரிய வெங்காயத்தின் விலை கிலோ ஒன்றுக்கு 78 - 80 ரூபா வரை இருந்ததாகவும் தற்போது சந்தையில் கிலோ ஒன்றுக்கு 62- 63 ரூபா வரையே விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

சந்தையில் அரிசிக்கும் எந்தத்தட்டுப் பாடுமில்லை ஆகக்கூடிய சில்லறை விலைநிர்ணயத்தின் அடிப்படையில் இது விற்கப்படுகின்றது தாராளமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

# கூரிய ஆயுத தாக்குதலில் தாய் உட்பட 6 மாத குழந்தை பலி

கொஸ்கொட தெற்கு பொரலுகெடிய பிரதேசத்தில் பெண்ணொருவரும் குழந்தையொன்றும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளவர்கள் 38 வயதுடைய தாய் மற்றும் அவரின் 6 மாதக்குழந்தையென்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் கள்ளக்காதலரால் இந்த கொலைச்சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் மனநல மருத்துவமனையில் சி கிச்சைபெற்று வருவதோடு, சந்தேகநபரை தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, கொட்டாஞ்சே னை, வாசல வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் பெண்ணொருவர் உயிரிழந்த நிலையில் மீட்டுள்ளதாகவும் 119 பொலிஸ் அவசர தொலைபேசி க்கு கிடைத்த தகவலையடுத்தே கொட்டாஞ்சேனை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

39 வயதுடைய நிசானி சாமுவேல் என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும், குறித்த உயிரிழப்பு தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வெசாக்கை முன்னிட்டு மதுபானசாலைகள் மூடல்

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இரண்டு நாட்களுக்கு மதுபானசாலைகள் மூடப்படும் என கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்றும் நாளையும் நாடு முழுவதிலும் உள்ள மதுக்கடைகள் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெசாக் பௌர்ணமி தினத்திற்காக மதுபானசாலைகள் மூடுவது குறித்து அரசாங்கம் எவ்வித அறிவித்தல் விடுக்கவில்லை எனவும் கலால் திணைக்களத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் 10 மற்றும் 11ஆம் திகதிகளில் மதுக்கடைகளை மூடுமாறு கலால் திணைக்களம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த இரண்டு தினங்களிலும் மதுக்கடை களை திறப்போருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அத்திணைக்களத்தால் சுட்டிக்காட்டப் பட்டது.

# கொரியா செல்வோரிடம் பணம் அறவிடுவது இரத்து

தென் கொரியாவிற்கு வேலை வாய்ப்பிற்காக செல்லும் இலங்கையர்களிடம் 5 இலட்சம் ரூபா பாதுகாப்பு பணம் அறவிடப்படுவதை உடனடியாக இரத்து செய்வதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தீர்மானித்துள்ளார்.

அமைச்சரின் ஆலோசனைப் படி நேற்று முதல் அதனை இடைநிறுத்துவ தற்கு தீர்மானிக்கப்பட்டதாக அவ் அமைச்சு தெரிவித்தது.

தென் கொரியாவிற்கு சட்ட ரீதியாக செல்லும் தொழிலாளர்களுக்கு தற்போது நடைமுறையில் இருக்கின்ற பிணைப் பத்திரங்களுக்கு மேலதிகமாக இந்தப் பணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இந்த தீர்மானத்தை உடனடியாக இரத்து செய்வதற்கு தீர்மானித்துள்ள அமைச்சர் தலதா அத்துகோரள, இது தொடர்பில் கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைந்த வர்களுக்கு அறிவிக்குமாறும் ஆலோச னை வழங்கியுள்ளதாக அவ் அமைச்சு கூறியது.

தற்போது தென் கொரியாவில் சுமார் 26 ஆயிரம் இலங்கை தொழிலாளர்கள் இருப்பதாகவும், கடந்த ஆண்டு 6 ஆயிரத்து 629 பேர் தொழிலுக்காக அங்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.







கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா வித்தியாலய மாணவத் தலைவிகளுக்கும், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுக்கும் சின்னம் சூட்டும் நிகழ்வும், மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது மாணவிகள் உறுதிமொழி எடுப்பதையும், பிரதம அதிதி மேல் மாகாணசபை உறுப்பினர் எம்.சகாஉல்லாஹ் சான்றிதழ் வழங்குவதையும், அருகில் அதிபர் எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா இருப்பதையும் விழாவில் பங்கேற்ற ஆசிரிய ஆலோசகர் எம்.எம்.கே.மஸ்ஸியா, பிரதி அதிபர்களான பஹ்மிதா றிஸ்னா உட்பட ஆசிரியைகளையும் படங்களில் காணலாம். முன்னாள் கல்விப் பணிப்பாளர் அகமத் யாசீன், கன்னலிய அரபுக் கல்லூரி அதிபர் பரீதா முஸம்மில் ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றனர்.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
10th MAY 2017 - WEDNESDAY

# ரோஹிங்கிய அகதிகளும் பொதுபலசேனாவின் குற்றச்சாட்டும்

யாழ்ப்பாணத்தில் கடலில் தத்தளித்தபோது இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்ட ரோஹிங்கிய முஸ்லிம் அகதிகள் தொடர்பாக பொதுபலசேனாவின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தாறுக்கு மாறான கருத்துக்களை வெளியிட்டு இலங்கை முஸ்லிம்கள் இவர்களை இங்கு திட்டமிட்டு குடியேற்றப்போவதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

வில்பத்துவில் குடியேறுவதற்காகவே இவர்கள் வந்திருக்கலாம் என்றும் இவர்களை நாடு கடத்த வேண்டும் என்றும் ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

காங்கேசன்துறை கடலில் ரோஹிங்கிய அகதிகளை மீட்டெடுத்தது முஸ்லிம்கள் எவருமல்ல. இலங்கை கடற்படையினரே என்பது தெளிவாக இருக்கும்போது முஸ்லிம்கள் மீது ஏன் இந்த அபாண்டமான குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றது என்பதே எமது கேள்வி.

வெளிநாடுகளிலிருந்து தொடர்ந்து முஸ்லிம்கள் அகதிகளாக வந்து குடியேறுகிறார்கள். நீர்கொழும்பில் மாத்திரம் 1500 பேர் தங்கியிருக்கிறார்கள் என்றும் பொதுபலசேனா தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு பிரதேசத்தில் அகதிகளாக வந்திருப்பவர்கள் காதியானிகள் என்ற இஸ்லாத்துக்கு எதிராக உள்ள ஒரு குழுவினராவார்கள். இவர்கள் இலங்கைக்கு வந்திருப்பது 2005ஆம் ஆண்டு இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் சபையுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையிலாகும். ஒரு நாடு நிறைவேற்ற வேண்டிய மனிதாபிமானக் கடமையை அரசு நீர்கொழும்பில் வந்துள்ள காதியானிகள் தொடர்பாகவே யாழ்ப்பாணத்தில் மீட்கப்பட்ட ரோஹிங்கிய அகதிகள் தொடர்பாகவும் செய்து வருகின்றது. இந்த மக்கள் தொடர்பான விடயங்களில் உள்ளூர் முஸ்லிம்களுக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பதனை முஸ்லிம் சமூகம் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். இந்த அகதிகள் ஐ.நா. ஏற்பாட்டில் மனிதாபிமானத்தை மதிக்கும் உலக நாடுகளில் குடியேற்றப்படுகின்றார்கள். கடந்த சில வருடங்களுக்கு முன் இலங்கை வந்த மியன்மார் அகதிகள் எவரும் இலங்கையில் இப்போது இல்லை என்பதனை பொதுபலசேனா அறியாது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை எழுப்புகிறது.

இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து பௌத்த மதகுருக்கள் போல் காவியுடை அணிந்து வந்து தங்கியிருக்கிறார்கள் என்றும் ஞானசார தேரர் குறிப்பிட்டிருக்கிறார்.

நாட்டின் சட்டத்தை மீறி எவர் வந்தாலும் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பது பாதுகாப்புத் துறையினரின் பொறுப்பாகும். அவ்வாறு பாதுகாப்புத் துறையினர் எடுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கு நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கும் முஸ்லிம் சமூகம் ஒரு போதும் தடையாக இருக்கப்போவதில்லை.

முஸ்லிம் சமூகத்தினை எப்படியேனும் சீண்ட வேண்டும் எனக்காத்திருக்கும் பொதுபலசேனாவுக்கு ரோஹிங்கிய அகதிகளது வருகை சும்மா இருந்த வாய்க்கு அவல் கிடைத்தது போன்றே அமைந்துள்ளது.

இவ்வாறான பொறுப்பற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி பெரும்பான்மை சமூகத்தை தவறாக வழிநடத்த பொதுபலசேனா மேற்கொள்ளும் முயற்சி ஒருபோதும் வெற்றிபெறாது என்பதே எமது கருத்தாகும்.

# நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதா?



**நாட்டின் பொருளாதார நிலை பற்றி கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் கற்கைப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் ஸ்ரீமல் அபேரத்ன தெரிவித்திருந்த கருத்துக்களை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.**

***கேள்வி: கடன் சுமையிலிருந்து மீளுவதற்கும் நேரடியான வெளிநாட்டு முதலீட்டை அதிகரித்து நாட்டின் வருமான நிலையை அதிகரிக்கச் செய்து அரசின் பொருளாதார எதிர்பார்ப்புக்கு மத்தியில் சொல்லப்பட்ட காரணிகள் இவற்றை நிறைவேற்றுவதற்கு, பலமான பொருளாதார கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு இந்த அரசுக்கு முடிந்திருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா?***

**பதில்:** கடந்த இரண்டரை வருட காலத்தில் நாம் இந்த விடயத்தில் முன்னேற்றம் கண்டதாகத் தென்படவில்லை. பிரச்சினையின் பாரதூரத்தன்மை மேலும் அதிகரித்து வருவதனையே காணக்கூடியதாக இருக்கின்றது. அரசின் கடனை செலுத்த வேண்டியது மக்களது வரி மூலம் கிடைக்கும் வருமானத்திலாகும். தற்போது இருக்கின்ற நிலையில் வருடாந்தம் செலுத்த வேண்டிய கடன் தவணைக்குச் சமமாகவே நாட்டின் வரி வருமானமும் உள்ளது . இந்த நிலைமை இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல. 2017, 2018ஆம் ஆண்டுகள் எங்களுக்கு இருக்கும் போனஸ் இரு வருடங்கள் என்றே நான் கருதுகிறேன். ஏனெனில் கடன் செலுத்துவது தொடர்பாக எங்களுக்கு பெரிய பிரச்சினை ஏற்படுவது 2019இல் ஆகும். எனவே இந்த இரு வருடங்களிலும் எங்களது தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்செல்ல வேண்டும்.

வெளிநாட்டு முதலீட்டுக்காரணிகளை நாம் எடுத்துக்கொண்டால் இது தொடர்பாக இலங்கையின் வரலாறு முழுவதும் பலவீனமான நிலையிலேயே இருந்தது. வெளிநாட்டு முதலீடு கூடுதலாக ஆசிய நாடுகளுக்கு திரண்டுவந்த போதும் இலங்கையின் வெளிநாட்டு முதலீடு தொடர்பாக முன்னேற்றம் காணவில்லை என்பது வியப்புக்குரிய காரணமாகும். இங்கே நாம் முதலில் கேள்வி எழுப்ப வேண்டியது யுத்தம் முடிவுற்றிருக்கின்ற போது இலங்கை நன்கு முதலீடு செய்யக் கூடிய ஒரு நாடு என்பதனை முதலீட்டாளர்கள் காணாமல் இருந்ததனாலாகும். வருடம் ஒன்றுக்கு ஒரு பில்லியன் டொலர் முதலீடு கூட கிடைக்காதிருப்பது ஏன் என்பதே கேள்வியாகும்.

***கேள்வி: ஜனநாயகம், நல்லாட்சி போதியகோட்பாடுகளை பலமாகச் செயற்படுத்துவதன் மூலம் நாட்டுக்கு பெருமளவில் வெளிநாட்டு முதலீட்டைக் கொண்டு வரலாம் என்பதே அரசின் பிரதான எண்ணமாக இருந்தது. அத்துறைகளில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியைப் பெறுவதற்கு அரசுக்கு முடியுமாக இருந்தாலும் முதலீட்டை நாட்டு கொண்டு வருவதற்கான சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியாது போனது ஏன்?***

**பதில்:** முதலீட்டாளர்களின் நம்பிக்கையைத் தான் முதலில் நாம் பார்க்க வேண்டும். செலவு அதிகமான சிங்கப்பூர் போன்ற நாடுகளில் போன்று எங்களை விட வறுமை மிக்க பங்களாதேஷ், வியட்நாம் போன்ற நாடுகளுக்கு முதலீட்டாளர்கள் செல்வது ஏன் என்று நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதலீட்டாளர்களது நம்பிக்கை பற்றிய பிரச்சினை இங்கு இருக்கின்றது. நாடு ஒன்றுக்கு முதலீடு அள்ளிவருவதற்கு ஜனநாயகம் என்பது பெரும் காரணமாக இல்லை என்றே நான் காண்கிறேன். சுதந்திரம், ஜனநாயகம் இருப்பது நல்லது. ஆனால் தேசத்தவர்கள் என்ற வகையில் நாம் அந்த சங்கற்பங்களில் நாம் முன்னேறி உள்ளோம். எந்தவொரு கொள்கைத் தீர்மானத்திற்கும் அதனடிப்படையில் நாம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம். இதன் காரணமாக ஜனநாயகத்தின் கீழ் தீர்மானம் எடுப்பது செயற்றிறமை அற்றது என்ற காரணி எழுகின்றது. கடந்த இரண்டரை வருடங்களில் பொருளாதார இலக்குகளை அடையாமல் போனதற்கான காரணமாக நான் காண்பது இங்கு இருக்கும் எல்லையற்ற ஜனநாயகமாகும். பொருளாதார ரீதியாக எடுத்துக்கொண்டால் முதலீட்டாளர்களுக்கு இருக்கும் பிரச்சினை அடுத்த 20 அல்லது 25 அல்லது 50 வருடங்களுக்குள் தமது முதலீட்டுக்கு பாதுகாப்பு இருக்கின்றதா என்பதாகும். தமக்கு இலாபகரமான முறையில் வியபாரத்தை மேற்கொள்வதற்கான சூழல் நாட்டில் இருக்கின்றதா என்பதை அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வார்கள். எமது நாட்டில் பொருளாதார சீர்திருத்தத்தை எடுத்துக் கொண்டால் இரு பிரதான சந்தர்ப்பங்கள் இருந்தன.

ஒன்று 1977 இல் செய்த பொருளாதார சீர்திருத்தம் மற்றையது 1990 இல் செய்தது. அதாவது நாம் இறுதியாக மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்தம் இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன் மேற்கொண்டது. எவ்வாறான போதும் அக்காலத்துக்குள் நாம் எதுவும் செய்யவில்லை எனக் கூறமுடியாது. வரியினை அங்குமிங்குமாக்குவது வெளிநாட்டு முதலீட்டாளர்களைப் பாதிக்கும் நல்லது போன்று மோசமான சட்டங்களையும் கொண்டு வந்து ஒவ்வொரு வேலைகள் செய்யப்பட்டன. ஆனாலும் தெளிவான திசையொன்றை நோக்கி பயணிக்கும் பொருளாதார கொள்கை ஒன்று இந்த 25 வருடங்களுக்குள் நாங்கள் செய்யவில்லை. சந்தைப் பொருளாதாரத்தை விகாரமடையச் செய்யும் அநேக விடயங்களை நாங்கள் செய்திருக்கிறோம். அதனால் எமது கொள்கைளினூடாக முதலீட்டாளர்களுக்கு தெளிவான திசை ஒன்றைக் காண்பிப்பதற்கு நாம் தவறி இருக்கின்றோம். இன்று ஒரு கொள்கையைத் தீர்மானிக்கும் போது நாளை மற்றொரு கொள்கையைத் தீர்மானிக்கிறோம். பொருளாதாரக் கொள்கைகளில் தொடர் தன்மை ஒன்று இருக்கவில்லை. அன்றன்று ஏற்படும் குறுகிய காலப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு இவ்வாறான விடயங்களைச் செய்கின்றோமே ஒழிய எங்களுடைய பிரதான இலக்கினை அடைவதற்காக நாம் இதனைச் செய்யவில்லை. இவையாவற்றிலும் முக்கியமாக அமைவது நாம் எடுக்கும் தீர்மானம் சரியா பிழையா என்பது அல்ல. அதன் முலம் முதலீட்டாளர்களுக்கு வழங்கும் செய்தி என்ன என்பதாகும்.

***கேள்வி: இந்த அரசின் இரு பிரதான தரப்பினருக்கிடையே பொருளாதார கொள்கை தொடர்பாக ஒருமித்த நிலைப்பாடு இல்லாமை இந்த பிரச்சினைகளுக்கு பிரதான காரணம் என சில பொருளியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். இதனை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?***

**பதில்:** நான் அதில் சாதகமான பக்கத்தையும் காண்கிறேன். இலங்கை அரசியல் வரலாற்றை எடுத்துக் கொண்டால் மாறி மாறி பதவிக்கு வந்து ஐ.தே.க. மற்றும் ஸ்ரீல.சு.க. அரசாங்கங்களின் கீழ் பொருளாதாரக் கொள்கை மாறுபட்டிருக்கின்றது. உறுதியான தன்மை இருக்கவில்லை. இப்போது அந்த உறுதித் தன்மை இருக்கின்றது. அதனால் எங்களுடைய நாட்டில் பொருளாதார கொள்கையின் கட்டமைப்பு எதிர்காலத்தில் மாறுவதற்கு காரணிகள் இல்லை. ஏனெனில் இரு பிரதான கட்சிகளும் ஓரளவு இணக்கப்பாட்டில் இருக்கிறார்கள். அவ்வாறு இருந்தாலும் பிரதான பலவீனமாக நாம் காண்பது இந்த அரசு 2015இல் பதவிக்கு வரும் போது காணப்பட்ட பலவீனம் பிரதான பிரச்சினை என்ன என்பதை நாங்கள் கண்டோம். எமக்கு வாய்ப்பினைத் திறந்து தந்த உலகப் பொருளாதார சுற்றாடல் ஒன்றும் அச்சந்தர்ப்பத்தில் இருந்தது. இந்த இரு காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு அச்சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டி இருந்தது. இங்கிருந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாம் அரசியல் சீர்திருத்தம் ஒன்றை மேற்கொள்வோம் என்ற தீர்மானத்திற்கு வருவதாகும். நாம் அந்த விடயங்களைச் செய்திருந்தால் இப்படியான ஒரு நெருக்கடிக்கு வந்திருக்கமாட்டோம். அரசாங்கம் ஒன்றுக்கு அரசியல் சீர்திருத்தத்தை செய்யக்கூடிய சிறந்த காலம் அந்த அரசு பதவியேற முதல் 6 மாத காலமாகும். காரணம் அதன் பின் அரசின் செல்வாக்கு படிப்படியாக குறைகின்றது. தேர்தல் நெருங்கும்போது அரசாங்கம் ஒன்று எப்படியும் பொருளாதார சீர்திருத்தத்திற்குச் செல்லவில்லை.

***கேள்வி: எமது பொருளாதார நெருக்கடி பற்றிப் பேசும் போது அரச துறையில் வீண்விரயம், செலவு பற்றி எப்போதும் பேசப்படுகின்றது. இந்த விடயத்தை எந்தளவு சுமையுடன் கவனம் இருக்க வேண்டும்?***

**பதில்:** மற்றவர்களுடைய பணத்தைச் செலவு செய்யும் போது எங்களுக்கு கணக்கே இல்லை. நாம் சம்பாதித்த பணத்தை செலவு செய்யும் போதுதான் எங்களுக்கு விளங்கும். நாம் சம்பாதித்த பணத்தைச் செலவு செய்யும் போது கவனமாகவும் நன்றாகவும் செலவு செய்வதற்கு நாம் முயற்சிக்கின்றோம். ஆனால் மற்றவர்களுடைய பணத்தைச் செலவு செய்யும் போது இந்தப் பிரச்சினைகள் எதுவும் எழுவதில்லை. அரசாங்கம் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாய் பணமும் அரசின் பணமல்ல. மக்களது வரியினையே அரசு செலவு செய்கிறது. மற்றையது எமது நாட்டில் நேரடி விகிதாசாரம் 20 சதவீதத்திற்குக் குறைவாகும். மறைமுக வரியினையே நாம் கூடுதலாகச் செலுத்துகிறோம். எமது நாட்டின் வரிவிகிதாசாரம் மிகவும் பெரியதாகும். மோசமான முறையில் வரி அறிவிட்டும் கூட எமது வரி வருமானம் போதாமல் இருக்கின்றது. எமது கடன் தவணையைச் செலுத்துவதற்கு வரி வருமானம் போதாது. அவ்வாறான நிலைமையின் கீழ் வீணான செலவுகள் கூடுதலாக இருப்பது மக்களைக் கோபப்படுத்தும் விடயமாகும். வீண விரய செலவுகள் எங்களுடைய ஓர் அரச நிறுவனத்திற்கு இருக்கும் பிரச்சினை அல்ல. பாராளுமன்றம் முதல் எமது முழு பொருளாதாரத்திலும் இதனைக் காணக் கூடியதாகவிருக்கின்றது.

***கேள்வி: அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் இடம்பெற்றுவரும் வீண் விரய செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அதன் தகவல்களைப் பகிரங்கப்படுத்துவதற்கு கிடைத்துள்ள வாய்ப்பின் முக்கியத்துவத்தை நீங்கள் எப்படிப் பார்கிறீர்கள்?***

**பதில்:** இலங்கையில் இருக்கின்ற சகல அரச நிறுவனங்களுக்கும் பொறுப்புக் கூறல் பற்றிய தகவல்கள் வருடாந்தம் வெளியிடப்படவேண்டும். எத்தனை ஊழியர்கள் வேலை செய்கிறார்கள். புதிதாக எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் போன்ற விடயங்களைப் பற்றிய தகவல்களை வெளியிடுவது முக்கியம். அரசாங்க நிறுவனங்கள் தொடர்பாக வருடாந்த கணக்காய்வு அறிக்கைகள் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்படுவது இல்லை. ஏனெனில் கணக்காய்வு அறிக்கையில் பரிசீலிக்கப்படுவது அந்தந்த நிறுவனங்களுக்கு எவ்வளவு பணம் கிடைத்தது. அவை உரிய ஒழுங்கு விதிகளின் படி செலவு செய்யப்பட்டிருக்கின்றதா என்ற காரணிகள் மட்டுமே. சரியாக பணம் செலவு செய்யப்பட்டிருந்தால் பிரச்சினைகள் ஏற்பட இடமில்லை. ஆனாலும் அந்தப் பணத்தைச் செலவு செய்து முடிக்கப்பட்டுள்ள உற்பத்தி எது என்பது பற்றி கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுவது இல்லை. எனவேதான் இந்த செயற்பாட்டுக்கு பொருளாதார சித்தாந்தம் உள்ளடக்கப்பட வேண்டுமென்று நான் கூறுகிறேன். தற்போது சகல அரச நிறுவனங்களிலும் வெப்தளங்கள் இருப்பதனால் மொத்தச் செலவு, வருட இறுதியில் உற்பத்திகள் என்ன இருக்கும், உத்தியோகத்தர்களது எண்ணிக்கை எவ்வளவு போன்ற விபரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறான பகிரங்கத் தன்மைக்கு நாம் போகாவிட்டால் இந்தப் பிரச்சினை எப்போதும் இருக்கும். சில அரச நிறுவனங்களுக்கு பெரும் வரி செலுத்தும் சுமையில் இருப்பது எங்களுக்குத் தெரியும். அரசு நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வது பற்றி நாம் பலவருடங்களாகப் பேசி இருக்கிறோம். ஆனால் இருக்கும் இந்த ஜனநாயக கட்டமைப்புக்குள் எங்களுக்கு அவற்றில் கைவைக்க முடியாதுள்ளது.

***கேள்வி: அரச நிறுவனங்களில் இருக்கும் இந்தப் பிரச்சினை போன்று எங்களுடைய நாட்டில் இருக்கும் அரச ஊழியர்களது எண்ணிக்கை மற்றும் வருடாந்த வரவு - செலவுத்திட்டத்தில் அவர்களது சம்பளம், கொடுப்பனவு என்பவற்றை அதிகரிப்பதற்கு அளிக்கும் முக்கியத்துவம் நாம் இப்போது பேசும் பொருளாதார நெருக்கடியின் ஒரு பக்கமல்லவா?***

**பதில்:** மக்களுக்கு தொழில் கிடைக்க வேண்டியது வரவு - செலவு திட்டத்தினால் அல்ல அல்லது அரசியல்வாதிகளின் கைகளினால் அல்ல. இப்போது நடப்பது வைபவங்களை வைத்து அரசியல்வாதிகள் தொழில்களை அன்பளிப்பாக வழங்குகின்றமையாகும். உற்பத்தித்திறன் தொழில்களும் இல்லை. அதேபோன்று வரவு - செலவுத் திட்டத்தினால் சம்பளத்தை வழங்க வேண்டியதில்லை. வரவு-செலவுத் திட்டத்தினால் சம்பளத்தை அதிகரிக்க முடியாது. ஏனெனில் வரவு - செலவுத் திட்டம் மக்கள் வரிகளினாலேயே சரி செய்யப்படுறது. மக்களிடம் வரி அறவிட்டு அந்தப்பணத்தினால் மற்றொரு சாராரின் சம்பளத்தை அதிகரிப்பது என்பது வேடிக்கையானது. சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டியது முதலீடு, தொழில் போன்று நிறுவனங்களது உற்பத்தி அதிகரிப்பின் மூலமாகும். இந்த விடயம் இடம்பெறாது வரலாறு முழுவதும் அரச ஊழியர்களது சம்பளத்தை அதிகரிப்பற்கு முக்கியத்துவம் அளிப்பதனாலேயே இந்தப்பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. நாம் மேலும் அதனைச் செய்தால் இந்தப் பிரச்சினையிலிருந்து மீள முடியாது. 2005ஆம் ஆண்டு எங்களுடைய நாட்டில் அரசாங்க ஊழியர்களது எண்ணிக்கை 9 இலட்சமாக இருந்தது. இன்றாகும் போது அத்தொகை 14 இலட்சமாக அதிகரித்து இருக்கின்றது. இந்த அளவு அரச ஊழியர்கள் அதிகரித்தாலும் நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எவ்வளவு தூரம் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள் என்பதே கேள்வியாகும்.

***கேள்வி: அமெரிக்க டொலருக்கு சமாந்தரமாக ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டதனால் தேசிய கடன்சுமை அதிகரித்துள்ளது போன்ற பொருளாதார பாதிப்பு நிலைகளைப் பற்றி பேசப்படுகின்றது. இதன் பிரதிபலன் எதிர்காலத்தில் எப்படி இருக்கும்?***

**பதில்:** அந்தப் பாதிப்பு எதிர்காலத்திலும் இருக்கும். டொலரின் பெறுமானம் என்பது மறுபக்கத்தில் ரூபாவின் வெளிப்பெறுமானம் என்பதாகும். டொலரின் பெறுமதி அதிகரிக்க அதிகரிக்க ரூபாவின் பெறுமதி குறைவது அதற்கே. டொலரின் பெறுமானம் ரூபாவின் பெறுமானத்திற்குச் சமாந்தரமாக அதிகரிப்பதற்குப் பிரதான காரணம் எங்களது ஏற்றுமதியின் வளர்ச்சி மற்றும் வெளிநாட்டு முதலீடு கிடைப்பதன் பலவீனம் என்பதாகும். நீதிச்சேவைகள் சுற்றுலாச் சேவைகள் போன்ற சேவைத்துறைகள் உட்பட எமது ஏற்றுமதி அதிகரிக்கப்பட வேண்டும் பொருட்களின் ஏற்றுமதி அதிகரிக்க வேண்டும். கடந்த 15 வருட காலமாக எமது நிகர தேசிய உற்பத்தி 35 சதவீத பெறுமானத்திற்கு இருந்தது. பொருட்களது ஏற்றுமதி இப்போதாகும் போது 15 சதவீதத்திற்குக் குறைந்த பெறுமானம் வரை கீழிறங்கியுள்ளது. எனவே இது ஒரு புதிய பிரச்சினை அல்ல. மறுபக்கத்தில் எமது வெளிநாட்டு முதலீடு கிடைப்பதும் பலவீனமடைந்துள்ளது. அது நீண்ட காலமாக இருந்த பிரச்சினையாகையால் அதனை அறிந்திருக்கவில்லை என்று சொல்ல முடியாது. இந்த இரு காரணிகளையும் நிறைவேற்றாது எங்களுக்கு ரூபாவின் பெறுமானத்தைப் பாதுகாக்க முடியாது. கடந்த காலத்தில் ரூபாவின் பெறுமானத்தைப் பாதுகாப்பதற்காக கடன் எடுத்தோம் அல்லது மத்திய கிழக்குக்கு பணிப்பெண்களாகச் செல்வோர் நாட்டுக்கனுப்பிய வெளிநாட்டு செலாவணி பயன்படுத்தப்பட்டது. இந்த இரண்டையும் ஒன்றாகப் பயன்படுத்த முடியாது. எமது நாட்டு மக்கள் மத்திய கிழக்குக்குச் சென்று பணம் அனுப்புவது என்பது சுபீட்சத்தின் அடையாளம் அல்ல. அது துரதிஷ்டத்தின் அம்சமாகும். மக்கள் கூடுதலாக மத்திய கிழக்குக்குச் செல்வது என்பதை உணர்த்துவது இந்த நாட்டில் அவர்களுக்கு சரியான தொழில்களோ வருமான வழிகளோ இல்லை என்பதாகும். மாத்திய கிழக்கில் இருந்து எமக்குக் கூடுதலான பணம் வருவதென்பது என்பது எமது துர்ப்பாக்கியத்தின் அடையாளமாகும். எவ்வாறான போதும் எமது ஏற்றுமதி பலவீனமடைந்து இருப்பதனால் எங்களுக்கு ரூபாவின் பெறுமானத்தைப் பேண முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. டொலரின் பெறுமானம் மேலும் அதிகரிப்பதனை தற்காலிகமாக நிறுத்துவதற்கு மத்திய வங்கி சேர்த்து வைத்திருக்கின்ற ஒதுக்கினைப் பயன்படுத்தியாகும். ஆனால் எமக்கு இருக்கின்ற ஒதுக்கு 5 பில்லியன் டொலராகும். அதனை மீண்டும் குறைக்க முடியாது. டொலருக்குச் சமாந்தரமாக ரூபாவின் பெறுமதியை தற்காலிகமாக நிறுத்துவதற்கு ஒவ்வொன்று செய்தாலும் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு முதலீட்டைக் கொண்டு வருதல் போன்ற காரணிகளை நிறைவேற்றாது அது ஒரு நீண்ட காலத்தீர்வாக இருக்காது.

நன்றி - ஸ்ரீலங்காதீப

# அனைத்து அரபுக்கல்லூரிகளுக்கும் ஒருமித்த பாடத்திட்டம் அவசியம்

## அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம்

(பேருவளை நிருபர்)

ஏழு வருட காலம் அரபுக்கல்லூரிகளில் கல்வி கற்று பரீட்சையின் மூலம் வழங்கப்படும் மௌலவி சான்றிதழ் இலங்கையில் மாத்திரமின்றி சர்வதேச மட்டத்திலும் அங்கீகரிக்கப்பட வேண்டுமானால் எல்லா அரபுக்கல்லூரிகளிலும் ஒரு முகப்படுத்தப்பட்ட ஒரு பாடத்திட்டம் அமுல் நடத்தப்பட வேண்டும் என தபால் சேவை மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் எம்.எச். அப்துல் ஹலீம் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள அரபுக்கல்லூரிகளின் பாடத்திட்டத்தை ஒழுங்குபடுத்துதல், மேம்படுத்துதல் தொடர்பான விசேட செயலமர்வு பேருவளை ஜாமியா நளீமியா கலாபீட வளாக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. செயலமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டிலான இச் செயலமர்வில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

நாட்டிலுள்ள அனைத்து அரபுக்கல்லூரிகளிலும் ஒரு முகப்படுத்தப்பட்ட ஒரு பாடத்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். என்ற நீண்ட காலப்பிரேரணையை மேலும் காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்த வேண்டும். இப்பணியை நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயல்பட்டு நிறைவேற்றுவோமேயானால் அது நீண்ட கால முயற்சிக்கு கிடைத்த பெரு வெற்றியாக அமையும். அரபுக்கல்லூரிகளின் பாடத்திட்டத்தை ஒருமுகப்படுத்துவதானது ஒரு பாரிய பணியாகும். இன்றையகால கட்டத்திற்கு கட்டாயம் இது தேவை என்பதை நன்குணர்ந்து அழகான முறையில் அனுகி ஆராய்ந்து பேசி சிறந்த முடிவுகளை உலமாக்கள் எடுக்க வேண்டும். நீங்கள் ஒற்றுமையாக செயல்பட்டு எடுக்கும் சிறந்த முடிவானது முஸ்லிம் சமூகத்திற்கு எதிர்காலத்திற்கும் பெரும் நன்மை கிட்டும் என்றார்.







உலக புகழ் தென்னிந்திய பிரபல பாடகர் டி.எம்.சௌந்தராஜனின் நினைவாக நம் நாட்டுப் பாடகர் கலைக்கமல் வழங்கி வரும் ராஜராகங்கள் நிகழ்ச்சி அண்மையில் கொழும்பு. ஜே.ஆர். ஜயவர்தன மண்டபத்தில் நடைபெற்றது. டி.எம்.எஸ்.ஸின் பாடல்களை சிறப்பாக வழங்கி சபையோரின் பாராட்டைப் பெற்ற கலைக்கமலை தொழிலதிபர் தெ.ஈஸ்வரன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், ஊடகவியலாளர் எம்.கே.எம்.அஸ்வருக்கு டி.எம்.எஸ். விருது வழங்கிய பின் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். வைபவத்திற்கு தலைமை தாங்கிய சமூக புரவலர் ஏ.பி. அப்துல்லையும், கலைக்கமல், கவிஞர் ப்ரேம்ராஜ் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# மறிச்சுக்கட்டி முஸ்லிம்களுக்கு விடிவாக 13 ஆம் திகதி ஜனாதிபதி முடிவு அமைய வேண்டும்

## காதர் மஸ்தான் எம்.பி



எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதியினால் வழங்கப்படவுள்ள சாதகமான பதில் மறிச்சுக்கட்டி முஸ்லிம்களுக்கு விடிவாக அமைய வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

நில மீட்பு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மறிச்சுக்கட்டி மக்களை சந்தித்து அமைச்சர் பைசர் முஸ்தபா மற்றும் நிசாத் பதியுதீனோடு இணைந்து போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுமாறு பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானும் பணித்திருந்தார். இதனையடுத்து மஸ்தான் எம்.பி.யினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை மக்களின் ஒட்டுமொத்த வாக்குகளாலும் உருவாக்கப்பட்ட நல்லாட்சியின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனவாதியோ அல்லது சிறுபான்மை மக்களுக்கு அநீதி இழைப்பவரோ அல்ல. மாறாக இந்த விடயத்து விவகாரத்துடன் தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதிக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டிருக்கின்றமையே உண்மை.

குறித்த விடயத்தில் ஜனாதிபதி அரசியல்வாதிகளுக்கு முதல் சம்பவம் தொடர்பில் அங்குள்ள சிவில் சமூக அமைப்புக்களையே சந்திக்க விரும்பினார். அதனடிப்படையில் அண்மையில் அனைத்து முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகள் சார்பிலும் சிவர் ஜனாதிபதியை சந்தித்ததன் விளைவாக எதிர்வரும் 13ஆம் திகதி சாதகமான பதிலொன்றைத் தருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை அப்போராட்டத்தை கைவிடுமாறும் கூறியிருந்தார். அதனடிப்படையில் எதிர்வரக்கூடிய 13ஆம் திகதி மறிச்சுக்கட்டி மக்களின் விடியலுக்கான நாளாக இருக்க வேண்டும் என்பதுடன், மீண்டும் தமது சொந்த நிலத்தில் அந்த மக்கள் சுதந்திரமாக வாழ ஜனாதிபதி வழிசமைக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். அத்துடன் சிறுபான்மை மக்களின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி நல்லாட்சியை பலப்படுத்த கிடைத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தை சரியாக ஜனாதிபதி பயன்படுத்துவார் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் மஸ்தான் எம்.பியினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமூக விஞ்ஞான போட்டியில் கல்முனை சாஹிராவுக்கு 3 முதலிடங்கள்

(எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

கல்முனை வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான சமூக விஞ்ஞானப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவர்கள் மூவர் முதலாம் இடங்களைப் பெற்று கிழக்கு மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனை வலயத்திற்கு உட்பட்ட 1000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியைச் சேர்ந்த தரம் 8 இல் கல்வி பயிலும் ஏ.ஆர். எம்.எவ்.ஸைபி தரம் 10 இல் கல்வி பயிலும் எம்.என்.நுஸைக் அஹமட் தரம் 11 இல் கல்வி பயிலும் அன்பல் அஹமட் ஆகியோர் முதலாம் இடங்களையும் தரம் 9 இல் கல்வி பயிலும் எம்.கே.ஏ.எஸ்.அனாப் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

# இன நல்லுறவைப் பிரதிபலிக்கும் மினுவாங்கொடை வெசாக் வலயம்

(மினுவாங்கொடை நிருபர்)

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு, மே 10 ஆம் திகதி முதல் ஒரு வார காலத்திற்கு, மினுவாங்கொடை நகரமையம் வெசாக் வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன நல்லுறவைப் பிரதிபலிக்கும் வகையில், இம்முறை இப்பிரதேசத்தில் வெசாக் வாரம் கொண்டாடப்படுவது விசேட அம்சமாகும்.

மினுவாங்கொடை நகர சபை, பிரதேச சபை, பிரதேச செயலகம், வைத்திய சாலை, பொலிஸ் நிலையம் உள்ளிட்ட அரச தனியார் வங்கிகள், வியாபார நிலையங்கள் என்பன இணைந்து இதற்கு அனுசரணை வழங்குகிறது.

இதேவேளை, மினுவாங்கொடை பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் ஆகியன, பௌத்த விகாரைகளுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறது.

வெசாக் பந்தல்கள், கூடுகள், வெளிச்ச அலங்காரங்கள் என்பன, கட்டுநாயக்க விமான நிலையம், நீர்கொழும்பு, குருநாகல், நிட்டம்புவ, கம்பஹா, கொழும்பு ஆகிய வீதிகளில், இம்முறை மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வெசாக் பந்தல்களைப் பார்வையிட வரும் பக்தர்களுக்கு, தான சாலைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், திவுலப்பிட்டிய இ.போ.ச. டிப்போவினால் இரவு நேர விசேட போக்குவரத்து சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.





கலகெதர, தெல்கஸ்யாய பிரதேச மக்களின் நீண்டநாள் தேவையாக இருந்த குடிநீர் பிரச்சினைக்கு தீர்வாக குடிநீர் வழங்கல் திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஞாயிற்றுக்கிழமை (07) பொது மக்களின் பாவனைக்காக திறந்து வைத்தார். இத்திட்டத்தின் மூலம் சுமார் 500 பேர் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் விரைவில் முறிவு வைத்திய விஷேட பிரிவு

## பிரதி அமைச்சர் பைசல் காசிம் அறிவிப்பு





(அஸ்லம் எஸ்.மௌலானா, காலித்தீன்)

சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையுடன் இணைத்து அங்கு முறிவு வைத்திய விசேட பிரிவு ஸ்தாபிக்கப்படும் என சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசிம் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை (08) கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கான குருதி மாற்றும் சிகிச்சை பிரிவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப்.ரஹ்மான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதி அமைச்சர் பைசால் காசிம் தனதுரையில் மேலும் கூறியதாவது:

'சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் நீண்ட கால பிரச்சினை தொடர்பில் நான் அந்த ஊர் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் வியாழக்கிழமை (07) இரவு நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம்.

அதன்படி அந்த வைத்தியசாலையை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையுடன் இணைத்து, இதனது இரண்டாவது பிரிவாக செயற்படுத்துவதற்கும் அங்கு சகல வசதிகளும் கொண்ட முறிவு வைத்திய விசேட பிரிவை உருவாக்குவதற்கும் தீர்மானித்துள்ளோம். இதன் மூலம் அஷ்ரப் வைத்தியசாலைக்கான ஆளணியும் வளங்களும் இன்னும் அதிகரிக்கப்படும் வாய்ப்பு உள்ளது. தற்போது சாய்ந்தமருது வைத்தியசாலையில் எந்தவொரு நோயாளியும் இல்லாமல் வார்ட்டுகள் மூடிக்கிடக்கின்றன. அந்த பெறுமதியான சொத்தை தொடர்ந்தும் வீணடிப்பதற்கு இடமளிக்க முடியாது. அதனால் இனிவரும் காலங்களில் அது முறிவு வைத்தியத்திற்கான விசேட வைத்தியசாலையாக மாற்றியமைக்கப்பட்டு, இப்பிராந்தியத்தில் வாழ்கின்ற சுமார் ஐந்து இலட்சம் மக்களுக்கும் பயனளிக்கக்கூடியதாக கட்டியெழுப்பப்படும் என்கின்ற நல்ல செய்தியை இவ்விடத்தில் பிரகடனம் செய்கின்றேன்.

இதன் அடிப்படையில் அங்கு இரண்டு அதி நவீன சத்திர சிகிச்சை கூடங்களும் ஒரு எக்ஸ்ரே பிரிவும் உடனடியாக நிர்மாணிக்கப்படும். முறிவு வைத்தியத்திற்கான அதி நவீன உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அங்கு ஏற்படுத்தப்படும். அதேவேளை எதிர்காலத்தில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் CT Scan வசதியும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மார்பு சிகிச்சைக்கான விசேட பிரிவும் ஏற்படுத்தப்படும். அத்துடன் என்னிடம் ஒரு பெரிய திட்டம் உள்ளது. அதாவது எதிர்காலத்தில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையையும் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையையும் மையப்படுத்தி ஒரு பிராந்திய பொது வைத்தியசாலையை உருவாக்க திட்டமிட்டுள்ளேன். தற்போது அம்பாறை நகரில் மாத்திரமே பொது வைத்தியசாலை இருப்பதனால் எமது கரையோர பிராந்திய மக்களுக்கும் அது போன்ற வசதியை ஏற்படுத்திக் கொடுத்து சுகாதாரத்துறையில் தன்னிறைவான சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான சூழலை உருவாக்க வேண்டியுள்ளது. சுகாதார அமைச்சின் மூலம் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் முழுமையான ஒத்துழைப்புடன் அம்பாறை மாவட்டத்திற்கு மாத்திரமல்லாமல் முழுக் கிழக்கு மாகாணத்திற்கும் நிறைய சேவைகளை என்னால் ஆற்ற முடிந்துள்ளது. அதனால் நல்லாட்சி ஆரம்பித்து நூறு நாள் திட்டத்தில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிறுவப்படாமல் போன அவசர விபத்து சிகிச்சைப் பிரிவை இங்கு அமைப்பதற்கு நான் பதவியைப் பொறுப்பேற்றதன் பின்னர் எடுத்துக்கொண்ட அயராத முயற்சிகள் காரணமாக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

# மறிச்சுக்கட்டி விவகாரம் ஜனாதிபதி உறுதிக்கு

## உலமா கட்சி பாராட்டு

பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளமைக்காக உலமா கட்சி ஜனாதிபதியை பாராட்டியுள்ளது.

இது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு உலமா கட்சி அனுப்பியுள்ள கடிதத்திலேயே இப்பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கண்டியில் நடைபெற்ற மே தின கூட்டத்தின் போது முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் இவ்வாறான பிரச்சினைகளை தீர்க்குமாறு உலமா கட்சித்தலைவர் முபாறக் மௌலவி ஜனாதிபதியிடம் நேரடியாக தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதனை ஜனாதிபதியும் ஏற்றிருந்தார்.

அண்மைக்காலமாக முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஜனாதிபதி மைத்திரி தீர்த்து இனங்களுக்கிடையில் அமைதியை ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கையிலேயே பதவிகளுக்கும் பணத்திற்கும் ஒரு போதும் பணியாத உலமா கட்சி ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் மீண்டும் இணைந்ததுடன் ஜனாதிபதி மைத்திரிக்கும் ஆதரவளிக்க முன் வந்தது.

ஜனாதிபதியுடனான இந்த இணைவின் வெற்றிகளை முஸ்லிம் சமூகம் எதிர் காலத்தில் பெறும் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் அதன் ஒரு கட்டமே மறிச்சுக்கட்டி பிரச்சினைக்கு ஜனாதிபதி முடிவு காண்பதாக உறுதி தெரிவித்திருப்பதாகும் என உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## சமையல்...! சமையல்...!

### பெர்சியன் பேசன் குக்கீ



**தேவையான பொருட்கள்:**

* கடலை மா - 3/4 கப்
* எண்ணெய்- 1/4 கப் (வாசனை இல்லாத சமையல் எண்ணெய்)
* ஐசிங் சுகர் - 2 மேசைக்கரண்டி
* ரோஸ் வோட்டர் - 1/2 தேக்கரண்டி
* ஏலக்காய் தூள் - 1/2 தேக்கரண்டி
* கஜு - 5

**செய்முறை**

கடலை மாவை வாசனை வரும் வரை குறைந்த தீயில் வறுக்கவும். பின்பு நன்கு ஆற வைக்கவும். கஜுவை நன்கு பொடியாக நறுக்கி வைக்கவும்.

ஆறிய மாவுடன், ஐசிங் சுகர், எண்ணெய், ரோஸ் வோட்டர் மற்றும் ஏலக்காய் தூள் சேர்த்து நன்கு பிசைந்து மாவை 1/4 இன்ச் சப்பாத்தியாக தேய்க்கவும். அதன் மீது பொடித்து வைத்துள்ள கஜு துருவலை தூவி லேசாக அழுத்தி விடவும். பிறகு வேண்டிய வடிவில் வெட்டி பேக்கிங் டிரேயில் 200 டிகிரி செல்சியஸில் 10 நிமிடங்கள் ஹீட் செய்யப்பட்ட ஓவனில், 8 நிமிடங்கள் 180 டிகிரி செல்சியஸில் பேக் செய்து எடுத்தால் பெர்சியன் பேசன் குக்கீ ரெடி!!!

## அன்புடன் கண்மணி

பா.மலரம்பிகை

# வியர்வையால் தலை அரிப்பா?

மற்ற காலங்களை விட கோடைக் காலத்தில், தலையில் அழுக்குகளின் அளவு அதிகரிப்பதால், வாரத்திற்கு 2-3 முறை தவறாமல் தலைக்கு குளித்துவிட வேண்டும்.

ஒருவேளை அளவுக்கு அதிகமாக வியர்த்தால், தினமும் தலைக்கு குளியுங்கள். ஷம்போ போட்ட பின் பயன்படுத்தும் கண்டிஷனரை மண்டையோட்டில் படும்படி போட வேண்டாம். இல்லாவிட்டால் அது மயிர்கால்களை கடுமையாக பாதித்து, தலையில் அரிப்பு மற்றும் பொடுகை அதிகரித்துவிடும். தலைமுடிக்கு கெமிக்கல்கள் கலந்த கலரிங் செய்வதைத் தவிர்க்க வேண்டும். அதில் உள்ள கெமிக்கல்களே ஸ்கால்ப்பை கடுமையாக பாதித்து அரிப்பை ஏற்படுத்தும். ஆகவே கலரிங் செய்வதைத் தவிர்த்து, முடிந்தவரை முடியின் இயற்கை நிறத்தைப் பாதுகாக்க முயற்சி செய்யுங்கள்.



வெளியே வெயிலில் செல்லும் போது, சூரியக்கதிர்கள் நேரடியாக தலைமுடியைத் தாக்காதவாறு, தலைக்கு தொப்பி போடுங்கள் அல்லது துணியைக் கட்டிக் கொண்டு செல்லுங்கள்.

# தாய்ப்பால் கொடுப்பது தாய்க்கு நன்மையே...



தாய்ப்பால் கொடுத்தால் குழந்தைக்கு மட்டுமல்ல தாயிற்கும் நன்மையே. பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு மார்பக புற்றுநோய் வராது என்று ஆய்வில் கண்டு பிடித்துள்ளது போன்று,

சிறுநீரக நோயும் தடுக்கப்படுகிறது. பால் கொடுக்கும் போது, உடலிலுள்ள வளர்சிதை மாற்றத்தில் வழக்கதை விட மாற்றங்கள் ஏற்படுவதாகவும் ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

மூன்று மாதங்களுக்கும் குறைவாக பால் கொடுப்பவர்களை விட, மூன்று மாதத்திற்கும் மேல் அதிகமாக பால் கொடுப்பவர்களுக்கு வளர்சிதை மாற்றம் மாறுபடுகிறது. இரத்த பிளாஸ்மாவில் பாஸ்போ லிபிட் மற்றும் குறைந்த சங்கிலி கொண்ட அமினோ அமிலங்கள் குறைவாக உற்பத்தியாகின்றன. இதனால் வாழ் நாள் முழுவதும் சிறுநீரக நோய் வராமல் தடுக்க முடியும் என ஆய்வு கூறுகிறது. தாய்ப்பால் கொடுப்பதால் சிறுநீரகம் தொடர்பான வளர்சிதை மாற்றத்தை நடக்கவிடாமல் பாதுகாக்கிறது. அதுவும் மூன்று மாதத்திற்கும் அதிகமாக கொடுப்பவர்களுக்கு சுமார் 15 வருட காலத்திற்கு சிறுநீரகநோய் வராமல் காக்கும்.

# பெண்களுக்கு மன அழுத்தம் அதிகம்



ஒரே அலுவலகத்தில், ஆண்கள் செய்யும் அதே வேலையை செய்யும் பெண்களுக்கு, மன அழுத்தம் அதிகம் ஏற்படுகின்றது. ஆண்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

ஆனால், ஆண்கள் செய்யும் அதே வேலையை செய்யும் பெண்களுக்கு, ஆண்களைவிட அதிக மன அழுத்தம் ஏற்படுகிறது.

அலுவலகத்தில், சொந்த வாழ்க்கைப் பிரச்சினைகளையும், அலுவலகப் பிரச்சினைகளையும் போட்டு குழப்பிக்கொள்வது, மேலதிகாரிகள் மரியாதையின்றி நடத்துவது, சக ஊழியர்கள் தோற்றம் பற்றி பேசுவது, எதிர்காலம் உள்ளிட்ட பிரச்சினைகள் காரணமாக பெரும்பாலான பெண்களுக்கு மன அழுத்தம் ஏற்படுகிறது. சிலருக்கு காரணமே இல்லாமல் மன அழுத்தம் ஏற்படுகிறது.

பெண்கள் தங்கள் பணியை விரைவாகவும், துல்லியமாகவும் செய்து முடிக்க விரும்புகின்றனர்.

ஆனால், நிர்வாகத் தரப்பிலோ, சக ஊழியர்கள் மட்டத்திலோ சரியான ஒத்துழைப்பு கிடைக்காத போது, துவண்டு விடுகின்றனர்.

மேலும், தங்கள் இலட்சியத்தை அடைவதற்காக, தங்கள் சொந்த வாழ்க்கையையும், அலுவலக பணிகளையும் பக்குவமாக கையாளுகின்றனர்.

எனினும், ஒரே பணி, வசதி வாய்ப்புகள் ஆகியவை ஆண், பெண் இருவருக்கும் சமமாக அளிக்கப்பட்டாலும், ஆண்களைவிட பெண்களுக்கு மன அழுத்தம் அதிகமாக ஏற்படுகிறது.

# கோடைக்கால உடல் பராமரிப்பு

கால் பாதங்களின் அடியில் உள்ள சூட்டை நீக்க, இளஞ்சூடான நீரில் கல் உப்பு, சிறிது எலுமிச்சைச் சாறு, பாதாம் எண்ணெய் போன்றவை கலந்த நீரில் 20 நிமிடங்கள் ஊற வைத்துப் பின்பு கழுவலாம். பாசிப்பயறை அரைத்துக் கால்களில் பூச வேண்டும். பின்பு, புளித்த தயிர் வைத்து நன்கு கால்களைத் தேய்த்துக் கழுவ வேண்டும்.



வெளியிடங்களுக்குச் செல்லும்போது முழு உடலையும் மூடும்படியான பருத்தி ஆடைகளைப் பயன்படுத்தலாம். இறுக்கமாக ஆடைகள் அணிவதைத் தவிர்க்கலாம். குளிக்கும் தண்ணீரில் முதல்நாள் இரவே, வேப்பிலையை ஊறவைத்து அந்த நீரை காலையில் பயன்படுத்தலாம்.

அதிக உடல் உஷ்ணத்தால் வயிற்றுவலி ஏற்படும். அதைச் சரி செய்ய, தொப்புள் பகுதியைச் சுற்றி விளக்கெண்ணெய் தடவலாம். அதேபோல், கண் இமைகளின் மேல்புறம் மற்றும் பாதங்களின் அடியில் விளக்கெண்ணெய் தேய்த்தால் உடல் சூடு தணியும். வெயிலிலோ அல்லது வெளியிலோ சென்றுவந்த பிறகு, ஈரமான துண்டை வயிற்றில் வைத்திருக்க வேண்டும். இதேநிலையில் 20 நிமிடங்கள் வரை இருந்தால் உடல் உஷ்ணம் குறையும்.

# சோர்வை போக்கும் காலை உணவு



சோர்வான மனநிலையில் இருப்பவர்களால் எந்தவொரு வேலையிலும் முழு ஈடுபாட்டோடு கவனம் செலுத்த முடியாது. காலையில் எழும் போதே பெரும்பாலானோரை சோர்வு தொற்றிக்கொள்ளும். உடலினுள் போதிய அளவு தண்ணீர் இல்லாவிட்டாலும் உடல் இயக்கம் குறைந்துவிடும். தேவையான அளவு தண்ணீர் பருகுவதன் மூலம் சுறுசுறுப்புடன் செயல்பட முடியும்.

ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடுவதும் சோர்வை போக்கும். அதிலும் காலை உணவை அவசியம் சாப்பிட வேண்டும். அதுதான் நாள் முழுவதும் சுறுசுறுப்புடன் வைத்திருக்கும். காலை உணவை சரியாக சாப்பிடாதவர்களை சோர்வு ஆட்டிப்படைத்துவிடும். மூன்று வேளை சாப்பிடும் உணவின் அளவை குறைத்து, அவ்வப்போது சத்தான உணவு பதார்த்தங்களை சாப்பிட்டும் வரலாம்.

---

# முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை எடுத்துக் கூற, மும்மொழிகளிலும் ஊடகங்களை உருவாக்க வேண்டும்

## முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர்

(எம்.எஸ்.எம்.ஸாஹிர்)

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை மும்மொழியிலும் எடுத்துச் சொல்வதற்கான ஊடகங்களை உருவாக்குவது காலத்தின் தேவையாகவுள்ளது. இதற்கு வர்த்தக சமூகத்தவர்களும் வசதி படைத்தவர்களும் உதவுவதற்கு முன்வர வேண்டும் என நவமணிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவருமான என். எம். அமீன் அறைகூவல் விடுத்தார்.

ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனமும் நவமணிப் பத்திரிகையும் இணைந்து நடத்திய ரமழான் பரிசுமழை விழா வெள்ளிக்கிழமை (05) மாலை ஜம்மியத்துஷ் - ஷபாப் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது,

நாட்டின் முஸ்லிம் சமூகத்தவருடைய இஸ்லாமிய சிந்தனையை குறிப்பாக இளைய தலைமையினுடைய இஸ்லாமிய ஆற்றலை மேம்படுத்தும் நோக்கிலே இந்தப் போட்டிகளை நடத்துகின்றோம். அஷ்-ஷபாப் நிறுவனம் எங்களோடு கைகோர்த்து செயற்படுகின்றது.

அதில் முக்கியமாக முதற்பரிசாக புனித உம்ரா செல்வதற்கான வாய்ப்பை மௌலானா ரவல்ஸ் வழங்கி இருக்கின்றார்கள்.

அடுத்து வட்டியில்லா வங்கியை செயற்படுத்திவரும் அமானா வங்கி ரமழான் வெற்றியாளர்களுக்கான சகல ஆறுதல் பரிசுகளையும் வழங்கி வருகின்றார்கள். மற்றும் பல சகோதரர்களும் ரமழான் பரிசு மழையில் தங்களது பங்களிப்பை வழங்கி இருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் நவமணி சார்பாக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நவமணி இந்த நாட்டினுடைய முஸ்லிம் சமூகத்துக்காக முஸ்லிம்களால் வெளியிடப்படுகின்ற ஒரே பத்திரிகை. நாங்கள் 21 ஆவது வருடத்திலே காலடி எடுத்து வைத்திருக்கின்றோம். நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகு நவமணி தினசரிப்பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. முஸ்லிம் சமூகத்துக்காக குரல் கொடுக்க, அபிலாஷைகளை வென்றெடுக்க, இந்த சமூகத்துடைய தேவைகள் சம்பந்தமாக மற்றவர்களுக்கு எடுத்துக் கூற. முஸ்லிம் சமூகத்தவர்களால் நடத்தப்படுகின்ற ஒரே பத்திரிகையாகும். ஆனாலும் பல இயாகங்களுக்கு மத்தியில் 21 வருடங்களைக் கடந்து வந்திருக்கின்றோம்.

1882 ஆம் ஆண்டு அறிஞர் சித்திலெப்பை முஸ்லிம் நேசனை உருவாக்கினார். அது நூற்றாண்டு கடந்தும் இன்றும் நினைவு கூரப்பட்டுக் கொண்டிருக்கின்றது. காரணம், இந்த சமூகத்துக்கு நன்மை செய்கின்ற ஊடகத்துக்கு அவர் பங்களிப்புச் செய்ததன் காரணத்தால். அன்று முதல் இன்று வரை எத்தனையோ தனவந்தர்கள் இருந்தாலும் அவர்கள் நினைவு கூரப்படுகிறார்கள் இல்லை.

இன்று வில்பத்துவிலே முஸ்லிம் மக்கள் தங்களது பாரம்பரியக் காணிகளை இழந்து வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள். இவற்றை சரியாக விளக்கிச் சொல்வதற்கு முஸ்லிம்கள் கைவசம் ஒரு ஊடகம் இல்லாதிருக்கின்றது.

இன்று இலங்கையில் 49 வானொலிகள், 21 தொலைக்காட்சிகள், 19 தினசரிப் பத்திரிகைள் இருந்தும் முஸ்லிம்களுடைய கைவசம் பலமான ஊடகங்கள் இல்லாமல் இருக்கின்றது. மிகுந்த சிரமத்தின் மத்தியில்தான் நவமணிப் பத்திரிகையை நாங்கள் முன்னெடுத்து சென்று கொண்டிருக்கின்றோம்.





சமூகத்தின் பிரச்சினைகளை உரத்துப் பேசுவதற்கு தனியான ஊடகம் ஒன்று கட்டாயம் தேவைப்படுகின்றது. அப்போதுதான் முஸ்லிம்களின் உண்மையான பிரச்சினை என்பது என்பது வெளிஉலகுக்குத் தெரியவரும்.

ஆங்கில மொழிகளில் முஸ்லிம்களின் பிரச்சினையை எடுத்துக் கூறபத்திரிகைகள் தேவைப்படுகின்றது. இதற்கு தனவந்தர்கள், வசதி படைத்தோர் முன் வரவேண்டும்- என்றார்



அரநாயக்க திப்பிடிய ஜமாஅதே இஸ்லாமியின் பெண்கள் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மலிவு விற்பனை சந்தை ஒன்று வில்பொல அஷ்ரப் ஞாபகர்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. சந்தையை ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.மிர்ஸியா திறந்து வைப்பதையும் விற்பனையாளர்களையும் சமூகமளித்தவர்களையும் படங்களில் காணலாம். (அரநாயக்க விசேட நிருபர் பாரா தாஹிர்)

# பிரான்ஸின் அடுத்த நெப்போலியன்

பிரான்ஸ் அரசியலில் இமானுவெல் மக்ரோன், அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளார். ஓராண்டுக்கு முன்னால், மிகவும் பிரபலம் இல்லாத, பிரான்ஸ் அதிபர்களின் ஒருவரின் அரசில் உறுப்பினராக இருந்தவர் இவர்.

இப்போது, முதலாவதாக இருந்த பிரதான மத்திய இடது மற்றும் மத்திய வலது சாரி கட்சிகள் மட்டுமல்ல, தீவிர வலதுசாரி கட்சியையும் தன்னுடைய 39 ஆவது வயதில் பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலின் தோல்வியடைச் செய்து மக்ரோன் வெற்றிக்கனியை சுவைத்துள்ளார்.

அதிஷ்டக்காற்றால் வெற்றியை நோக்கி மக்ரோன் அடித்துச் செல்லப்பட்டதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

தொடக்கத்தில் முன்னிலை வகித்து வந்த மத்திய வலதுசாரி ஜனாதிபதி வேட்பாளர் பிரான்சுவா பியோங் ஊழல் குற்றச்சாட்டால் பின்னடைவைச் சந்தித்தார், சோஷலிச ஜனாதிபதி வேட்பாளர் பென்வா அம்வோங் கட்சியில் ஏற்கெனவே ஓரங்கட்டப்பட்ட நிலையில், இக்கட்சிக்கு பாரம்பரியமாக வாக்களித்து வந்தவர்கள் வேறு தெரிவுகளை செய்து விட்டதால் பெரும் தோல்வியை சந்தித்தார்.

''சற்றும் எதிர்பார்க்காத ஒரு சூழ்நிலையை மக்ரோன் எதிர்கொண்டதால், அவர் மிகவும் அதிஷ்டக்காரர் ஆகிவிட்டார்'' என்று பாரிஸில் இருக்கும் டெர்ரா நோவா சிந்தனை குழுவின் மார்க்-ஆலிவர் பாடிஸ் தெரிவித்துள்ளார்.

வெறும் அதிர்ஷ்டம் மட்டும், இக்கதையின் விபரங்கள் முழுவதையும் குறிப்பிட்டுவிடாது. மக்ரோங் சோஷலிச கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டிருக்கலாம். ஆனால், பல ஆண்டுகள் அதிகாரத்திலிருந்த பின்னர், கட்சியின் செல்வாக்கு மக்களிடம் குறைந்துவிட்டதால், அவருடைய முயற்சிகள் பயனற்றுப்போகும் என்பதை உணர்ந்து கொண்டார்.

''யாரும் இல்லாதபோது, அங்கு ஒரு வாய்ப்பு இருக்கலாம் என்பதை அவரால் முன்னரே கணிக்க முடிந்தது'' என்கிறார் பாடிஸ்.

ஸ்பெயினில் போடேமோஸ், இத்தாலியில் ஐந்து நட்சத்திர இயக்கம் என ஐரோப்பாவின் வேறு இடங்களில் தோன்றிய அரசியல் இயக்கங்களை அவர் கவனித்திருக்கிறார். பிரான்ஸில் அரசியல் சக்தியை மாற்றுவதற்கு இணையான சக்தி இல்லை என்று என்பதை அவர் அறிந்திருக்கிறார்.

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ''மக்களால் நடத்தப்படும் 'என் மார்ச்' (அணிவகுப்பு) என்ற இயக்கத்தை தோற்றுவித்தார். நான்கு மாதங்களுக்கு பின்னர் ஜனாதிபதி பிரான்சுவா ஓலாந்தின் அரசிலிருந்து வெளியேறினார்.

என் மார்ச்சை நிறுவிய பின்னர், அவர் தன்னுடைய அணியை 2008 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பறக் ஒபாமா முயற்சித்த அடிமட்ட நிலையிலிருந்து தன்னுடைய ஆதரவாளர்களை அணி திரட்டினார் என்று பாரிஸிலிருக்கும் பகுதிநேர பத்திரிகையாளர் எமிலி செச்சுல்தீஸ் தெரிவிக்கிறார்.

முதன்முதலில் 'கிராண்டே மார்ச்' (மாபெரும் பேரணி) நடத்தி தன்னுடைய அரசியல் தரநிலையை உயர்த்திக் கொண்டார். ஆனால், என் மார்ச் ஆர்வலர்களோ அனுபவம் இல்லாதவர்களாக இருந்தனர்.

தேர்தல் பரப்புரையின்போது, 2008 ஆம் ஆண்டு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பறக் ஒபாமாவின் பரப்புரையில் தன்னார்வத்துடன் பணிபுரிந்திருந்த அரசியல் நிறுவனத்திலிருந்து, பிரான்ஸை முழுமையாக அதிகமாக பிரதிநிதித்துவப் படுத்தும் மாவட்டங்களையும், சுற்றுப்புறங்களையும் இனம்கண்டு கிடைத்திருந்த கணிப்பு முறையை மக்ரோங் பயன்படுத்தினர்'' என்று செச்சுல்தீஸ் குறிப்பிடுகிறார்.

''3 லட்சம் பேரின் வீட்டுக்கு நேரடியாகச் சென்று சந்திக்க தொண்டர்களை அனுப்பினர்''. இந்த தொண்டர் படை விரைவாக செயற்பட்டது மட்டுமல்ல, நாடு முழுவதுமுள்ள வாக்காளர்களிடம்லிருந்து 15 நிமிடநேர 25 ஆயிரம் பேட்டிகளை எடுத்தனர். இத் தகவல்கள் அனைத்தும் பெரியதொரு தரவுதளத்தில் பதிவேற்றப்பட, அவை தான் பரப்புரை முதன்மைகளையும், கொள்கைகளையும் வகுக்க உதவின.

நாட்டின் நாடி நரம்பை அறிந்துகொள்ள ஓர் இலட்சியத்தை குவிமையமாக வைத்து செயற்படுவதாக இந்த குழு மக்ரோனுக்கு அமைந்ததோடு, தொண்டர்களை வீடு வீடாக செல்ல வைத்ததில் இவருடைய இயக்கத்தோடு மக்கள் தொடர்பு வைத்திருப்பதை தொடக்கத்திலேயே அவர் உறுதி செய்துகொண்டார். இந்த முயற்சி இந்த ஆண்டு அவர் செய்ததற்கு களப் பணியாக அமைந்துவிட்டது. அதனை மக்ரோன் தனக்கு சாதகமாக்கிக் கொண்டார்.

மக்ரோங்கின் அரசியல் ஆளுமை முரண்பாடுகளால் நிறைந்திருப்பதாக தோன்றியது. ஜனாதிபதி பிரான்சுவா ஓலாந்தின் சீடராக இருந்து புதிதாக வந்தவர், பொருளாதார அமைச்சர், முன்னாள் முதலீட்டு வங்கியாளர் அடிமட்ட இயக்கத்தை நடத்துகிறார், பொதுத் துறைகளை குறைப்பதற்கு முற்போக்கு திட்டமுடைய மையவாதி என்பதாக முரண்பட்ட நபராகவே தோற்றமளித்தார்.

இதனால்தான், மக்ரோன் சொல்வது போல புதியவர் யாரும் பயனடைய மாட்டார்கள். மேல்தட்டு வர்க்கத்தினரே பயன்பெறுவர் என்று சரியான தாக்குதல் தொடுக்க போட்டியாளர் மெரைன் லெ பென்னுக்கு ரொம்பவே வசதியாக அமைந்துவிட்டது.

'புதியதாக ஒன்று வேண்டும்' என்று மக்களின் மத்தியில் எதிரொலித்ததை வைத்து தனக்கான சுய தோற்றத்தை உருவாக்கி கொண்ட மக்ரோன், இன்னொரு பிரான்சுவா ஒல்லாந்தாக தான் முத்திரை குத்தப்படும் முயற்சிகளை தவிர்த்துவிட்டார்.

''பிரான்ஸில், ஒரு வழி யில் அதிக எதிர்மறையான மனநிலை பரவியிருக்கிறது. மக்ரோன் மிகவும் நேர்மறையான செய்தியோடு வந்தார்'' என்கிறார் மார்க்-ஆலிவர் பாடிஸ்.

''அவர் இளைஞர். சக்தி நிறைந்தவர். பிரான்ஸூக்கு என்ன செய்வார் என்று அவர் விளக்கவில்லை. ஆனால், மக்கள் எவ்வாறு வாய்ப்புக்களை பெறுவர் என்று சொன்னார். இத்தகைய செய்தியை கொண்டிருந்தவர் இவர் மட்டுமே''.

**மெரைன் லெ பென்னுக்கு பெரும் எதிர்**

மக்ரோங்கின் அதிக நேர்மறை தொனிக்கு எதிராக அமைந்த மெரைன் லெ பென்னின் குடிவரவு எதிர்ப்பு, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிர்ப்பு அடங்கிய பரப்புரைகள் அனைத்தும் எதிர்மறை செய்தியாக வந்தன.

மக்ரோன் பரப்புரை பேரணிகள் அனைத்தும் பிரகாசமான பகுதிகளில், பொப் இசை முழங்க நடைபெற்றதாக கூறுகிறார் எமிலி செச்சுல்தீஸ். ஆனால், மெரைன் லெ பென்னின் பரப்புரை பேரணிகளோ போத்தல்களை எறிகின்ற, கோப உணர்வுகளை வெளிக்காட்டுகிற போராட்டக்காரர்களாலும், காவல் துறையினர், எதிர்மறை கருத்துடையோராலும் நிறைந்திருந்தாக இருந்தது.

மே மாதம் 3ஆம் திகதி நடத்தப்பட்ட பெரியதொரு தொலைக்காட்சி விவாவதத்தில், இரு பக்கத்தினராலும் அவமதிப்புக்குரிய தாக்குதல்கள் அதிகம் நிறைந்திருந்தன.

தந்தையின் அதே கடும்போக்கு பின்னணியோடு மெரைன் லெ பென், அச்சமறியா பெண்ணாக ஏமாற்றும் உள்நோக்கத்தில் அடுத்தவரை கவர எண்ணினார். லெ பென்னின் தந்தை ஒரு சோஷலிச பொம்மையாக இருந்தவர்.

ஸ்திரமில்லாத, பிளவுண்ட தீவிர வலதுசாரி ஜனாதிபதி வாய்ப்பை பெறுவதை பற்றி பலரும் எச்சரிக்கை அடைந்தனர். எனவே, மக்ரோனை மட்டுமே, லெ பென்னின் ஜனாதிபதி ஆகின்ற வழியில் கடைசி தடையாக பார்த்தனர்.

மெரைன் லெ பென் உயர் செயற்திறன் வாய்ந்த பரப்புரை மேற்கொண்டிருக்கலாம். ஆனால், பல மாதங்களாக அவருக்கு மக்களின் ஆதரவு குறைந்து கொண்டே வந்துள்ளது. 30 சதவீதத்திற்கு நெருக்கமான ஆதரவை கடந்த ஆண்டு அவர் கொண்டிருந்தார். என்றாலும், இரண்டு வாரங்களில் இருமுறை அவரை இம்மானுவேல் மக்ரோங் தோல்வியடையச் செய்துள்ளார்.

மேலும் பிரான்ஸை பொறுத்தவரை நெப்போலியனுக்கு அடுத்து மிகவும் இளவயதில் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டவர் மக்ரோன் என்பது குறிப்பிடத்தக்கது.

**காதலில் மக்ரோன்**

பிரான்ஸின் புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இமானுவெல் மக்ரோன், மனைவியுடன் மேடையில் தோன்றியபோது ''பிரிகெட்டி! பிரிகெட்டி! பிரிகெட்டி!'' என்று மக்கள் முழங்கினர். யார் இந்த பிரிகெட்டி? என்ற கேள்வி அனைவரிடத்தும் எழுந்தது. அவரே மக்ரோனின் மனைவி. வழக்கத்தில் இருந்து மாறுபட்ட வித்தியாசமான தம்பதியினர் மக்ரோங்-பிரிகெட்டி. இதில் சுவாரஸ்யமான விடயமென்னவென்றால் மக்ரோனை விட அவரது காதல் மனைவி பிரிகெட்டி 24 வயது மூத்தவர் என்பதே.

மக்ரோனுடன் காதல் மலர்ந்தது எப்படி? என்பது குறித்து அவரது காதல் மனைவி பிரிகெட்டி தெரிவிக்கையில்

''பொதுவான, சாதாரண ஜோடி அல்ல நாங்கள்'' என்று தனது திருமண நாளின் போது, அவரே தங்களைப் பற்றி தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தம்பதியின் வயது வித்தியாசத்திலும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தம்பதியின் வயது வித்தியாசத்திலும் ஒரு ஒற்றுமை உண்டு. 24 ஆண்டுகள் என்பதுதான் அது. ஆனால், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் , மெலினாவை விட 24 ஆண்டுகள் மூத்தவர், பிரான்ஸ் அதிபரோ, மனைவியை விட 24 வயது இளையவர் என்பது தான் ஒரே வித்தியாசம்.

இமான்வெல் 15 வயது சிறுவனாக இருந்தபோது, புத்திசாலியாகவும், படுசுட்டியாகவும் இருப்பாராம். அமியென்ஸில், ஜெஸ்யூட் தனியார் பாடசாலையில் மாணவராக இருந்தபோது, பிற பெரியவர்களுடன் சமமான நட்பை கொண்டிருந்ததாக சொல்கிறார், அவரது முன்னாள் நாடக ஆசிரியரும், இன்னாள் மனைவியுமான பிரிகெட்டி. அப்போதே அந்த புத்திசாலி மாணவனால் கவரப்பட்டேன் என்கிறார் அவர்.

அண்ட்ரே ஒஸைஜர் என்ற வங்கியாளரை திருமணம் புரிந்து, மூன்று குழந்தைகளுக்கு தாயான பிரிகெட்டி ட்ரோங்னெக்ஸ், பிரபல சொக்லெட் நிறுவன குடும்ப வாரிசு ஆவார்.

தனது மகன் காதல்வயப்பட்டிருப்பது தெரிந்தாலும், காதலி யார் என்று தெரியாமல் இருந்த மக்ரோனின் பெற்றோருக்கு, அது பிரிகெட்டி என்று தெரிந்ததும் அதிர்ச்சியாக இருந்தது. வேறு வழியின்றத

> 2017 தேர்தலை மக்ரோன் சந்திக்க வேண்டும். ஏனென்றால், 2022இல் எனது முகத்தோற்றமே அவருக்கு சவாலாக இருக்கும்
>
> - பிரிகெட்டி

நிலையில் மக்ரோங்குக்கு 18 வயதாகும் வரை ஒதுங்கியிருக்குமாறு பிரிகெட்டியை கேட்டுக்கொண்டனர். மக்ரோனுக்காக எந்த உறுதியும் அளிக்க தயாராக இருந்தேன் என்கிறார் பிரிகெட்டி.

சக மாணவியான லோரன்ஸ் ஒஸைஜரின் மீது மக்ரோனுக்கு காதல் இருக்கலாம் என்று பிறர் எண்ணியிருந்த நிலையில், மக்ரோங் காதலிப்பது அவரின் தாயார் பிரிகெட்டியை என்பது ஆச்சரியமாக இருந்தது என்று, மக்ரோனின் வாழ்க்கை வரலாற்றை புத்தகமாக்கியுள்ள அனே புல்டா குறிப்பிட்டுள்ளார்.

17 வயதாக இருந்தபோது, ஒருநாள் நாம் இருவரும் கட்டாயம் திருமணம் செய்து கொள்வோம் என்று தனது காதலிக்கு வாக்களித்த மக்ரோங், 2007 இல் அந்த வாக்கை பூர்த்திசெய்தார்.

பிரிகெட்டி எனது மருமகள் என்பதை விட சிறந்த தோழி என்று மக்ரோங்கின் தாயார் சொல்கிறார்.

மக்ரோனின் முக்கிய ஆதரவாளர்களில் ஒருவர், சக மாணவியாய் இருந்து மக்ரோனுக்கு மகளான லாரன்ஸ் ஒஸைஜரும், அவரது உடன்பிறப்பும், வழக்கறிஞருமான 32 வயது டிபைனும் ஜனாதிபதி தேர்தலுக்கான பாரீஸ் தேர்தல் பேரணியில் (இறுதி) முக்கிய பங்குவகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவித்தபோது, குடும்பத்தினர் அனைவரும் ஒரே மேடையில் கூடி, வெற்றியை கொண்டாடினார்கள்.

இமானுவெல் மக்ரோனுக்கு பிரிகெட்டியின் முதல் திருமணத்தின் மூலம் மூன்று குழந்தைகளும், ஏழு பேரப்பிள்ளைகளும் பரிசாக கிடைத்தது.

மக்ரோன், பிரான்சின் பொருளாதார அமைச்சராக பதவியேற்றபோது, பிரிகெட்டி தனது ஆசிரியப் பணியை விட்டு விலகி, கணவரின் நம்பிக்கைக்குரிய ஆலோசகராக மாறினார்.

**பெண்களுக்கு முக்கியத்துவம்**

அரசியலில் பெண்களுக்கு உரிய பங்களிப்பு தரவேண்டும் என்ற கருத்தை மக்ரோனுக்கு ஏற்படுத்தியதற்காக பிரிகெட்டி பாராட்டப்படுகிறார். ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில், 'என் மார்சே' என்ற மக்ரோங்கின் புதிய இயக்கம், தேர்ந்தெடுக்கும் வேட்பாளர்களில் பாதி பேர் பெண்களாக இருப்பார்கள் என்று மக்ரோன் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



நாட்டின் முதல் பெண்மணியின் பங்கை முறைப்படுத்த விரும்புவதாக ஒரு பேட்டியில் கூறிய மக்ரோன், ''நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், மன்னிக்கவும், நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவருக்கும் முக்கியமான பொறுப்பும், இடமும் உறுதியானது'' என்றும் குறிப்பிட்டார்.

''முதல் பெண்மணியின் பொறுப்புக்கு சம்பளம் கிடையாது, அவர் அந்த பதவிக்கு மதிப்பை ஏற்படுத்துவார், குரல் கொடுப்பார், விடயங்களின் மேல் கருத்து கொண்டிருப்பார், எனது பக்கத்தில் எப்போதுமே இருந்தாலும், பொதுத் தளத்திலும் பங்காற்றுவார்'' என இமானுவெல் மக்ரோன் கூறுகிறார்.

மாணவரான மக்ரோன், பிரிகெட்டியிடமிருந்து அறிவுரைகளை கேட்பது போன்ற கார்ட்டூன்கள் இப்போது பிரான்சில் பிரபலமாகியிருக்கிறது. ஜனாதிபதி தேர்தலில் மக்ரோங்குடன் இறுதிச்சுற்று போட்டியில் இருந்த மரைன் லெ பென் மிகவும் ஜாக்கிரதையாக மக்ரோன்-பிரிகெட்டியின் உறவின் தோற்றம் குறித்து கிண்டலடித்திருந்தார்.

''மக்ரோன் ஆசிரியர்-மாணவர் விளையாட்டை என்னுடன் விளையாட நீ முயல்வது தெரிகிறது. ஆனால், அது எனக்கு ஒத்துவராது'' என்று ஏளனப் புன்னகையுடன் கூறியிருந்தார் மரைன் லெ பென்.

திருமதி மக்ரோன் தனது கணவருடனான வயது வித்தியாசம் குறித்த பிறரின் விமர்சனத்தை புன்னகையுடன் எதிர்கொள்கிறார். ஒரு புத்தகத்தில் அவர் என்ன குறிப்பிட்டிருக்கிறார் தெரியுமா? ''2017 தேர்தலை மக்ரோன் சந்திக்க வேண்டும். ஏனென்றால், 2022இல் எனது முகத்தோற்றமே அவருக்கு சவாலாக இருக்கும்'' - இவ்வாறு பிரிகெட்டி தமது காதல் வாழ்க்கையின் சுவாரஸ்யத்தை உலகத்துக்கு வெளிப்படுத்தியுள்ளார்.



நவமணி


# இன, மத பேதங்களை மறந்து பாலஸ்தீன அரசியல் கைதிகளுக்கு ஆதரவளிப்போம்



## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அழைப்பு

இஸ்ரேல் சிறைச்சாலைகளில் வாடுகின்ற பாலஸ்தீன அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் முகமாக இலங்கை பாலஸ்தீன தூதுவராலயத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கையெழுத்து மகஜருக்கு இன மத பேதங்களை மறந்து அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அழைப்பு விடுத்தார்.

பாலஸ்தீன சிறைக்கைதிகளின் உண்ணாவிரத ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாக கையொப்பமிட்ட இராஜாங்க அமைச்சர், அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

முஸ்லிம்களின் புனித பூமியான பாலஸ்தீனத்தில் அத்துமீறி குடியேற்றங்களை நிறுவி வருகின்ற இஸ்ரேல், ஏராளமான பாலஸ்தீனியர்களை சிறைப்படுத்தி வைத்துள்ளது. பல ஆண்டுகளாக அரசியல் கைதிகளாக சிறையில் வாடுகின்ற அவர்கள் தற்போது உண்ணாவிரத போராட்டம் ஒன்றினை மேற்கொண்டு வருகின்றனர்.

56 பெண்கள், 28 ஊடகவியலாளர்கள், 100 நோயாளர்கள், 300 சிறுவர்கள், 13 நீதித்துறை கவுன்சில் உறுப்பினர்கள், 500 ஆயுள் தண்டனைக் கைதிகள் என சுமார் 6500 பாலஸ்தீனியர்கள் கடந்த மூன்று வாரங்களாக குறித்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கு ஆதரவாக இலங்கை பாலஸ்தீன தூதுவராலயம் கையெழுத்து மகஜர் ஒன்றினை தயாரித்து வருகின்றது.

இதில், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள் என ஏராளமானவர்கள் கையெழுத்திட்டு தமது ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த மகஜரில் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கையொப்பமிட முடியும்.

எனவே, இன மத பேதங்களை மறந்து குறித்த மகஜரில் அனைவரும் கையெழுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பலஸ்தீன தூதுவர் சுஹைர் ஹம்தல்லா அமைச்சரை வரவேற்பதனை படத்தில் காணலாம்.

## வடமாகாண சபையை முற்றுகையிட்டு பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்



(யாழ்.நிருபர் பாறுக் ஷிஹான்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று வடக்கு மாகாண சபையை முற்றுகையிட்டு போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

வடக்கு மாகாண சபையின் 92ஆவது அமர்வு கைதடி பகுதியில் உள்ள பேரவைச் செயலக சபா மண்டபத்தில் தற்போது இடம்பெற்று வரும் நிலையில் குறித்த போராட்டம் மாகாண சபை நுழைவாயில்களை மறித்து நடைபெறுகிறது.

இதன் போது மாகாண சபை அமர்வில் கலந்துகொள்ள வந்த வடக்கு மாகாண முதலமைச்சர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வேலையற்ற பட்டதாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

எனினும் அப்பேச்சுவார்த்தை வெற்றி அளிக்காததன் காரணத்தினால் சபைக்கு போக முடியாத நிலையில் வடக்கு முதல்வர் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

மேலும் அரச நியமனங்களை பெற்றுத்தருமாறு வலியுறுத்தி கடந்த 72 நாட்களாக வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் தமக்கு தீர்வை வழங்குமாறு வடக்கு மாகாண சபையை முற்றுகையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





கடந்த வருடம் தேசிய மீலாத் விழா போட்டியில் வெற்றி பெற்ற கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கிண்ணியா மத்திய கல்லூரி அப்துல் மஜீது மண்டபத்தில் இஸ்லாம் பாட ஆசிரிய அலோசகர் ஏ.எம். கலீல் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். அகமட் லெப்பை மாணவர்களை போட்டி நிகழ்ச்சிக்கு வழி நடத்திய அதிபர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தார். இதில் டி.பி. ஜாயா மகளிர் வித்தியாலய அதிபர் எம்.எம்.எம். முஸம்மிலுக்கு சான்றிதழை வழங்கி வைப்பதையும், அத்தோடு தேசிய மட்டத்தில் ஆங்கில பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி ஜிப்ரி சாரா சம்மாவுக்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) ஐ.ஏ ஹஸன் சான்றிதழை வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம். (கிண்ணியா சஹ்ரின் எம்.இஸ்மத் , திருமலை எம்.ரீ.எம். பாரிஸ்)

## கிண்ணியா ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

(கிண்ணியா ஏ.ஆர்.எம்.றிபாஸ்)

கிண்ணியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களான அப்துல்லாஹ் மஃறுப், துரைரெட்ணசிங்கம் , நஜிப் அப்துல் மஜித் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃறூப் மற்றும் எம்.எஸ்.தௌபீக் அகியோருடன் பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ், திணைக்கள மற்றும் அரச அலுவலக உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

இக் கூட்டத்தில் மீள்குடியேற்றம், திண்மக் கழிவு அகற்றுகின்ற விடயம் தொடர்பான பிரச்சினை, வெளி மாவட்டங்களில் இருந்து வந்து மணல் அகழ்பவர்களை தடை செய்வது சம்பந்தமாகவும், ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகள் , கர்ப்பிணித் தாய் மார்களுக்கு வழங்கப்படு கின்ற உலர் உணவு தரம் குறைவானதாக பொதுமக்கள் முறைப்பாடு செய்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. கிண்ணியா மகளிர் மகா வித்தியாலய இடையால் செல்கின்ற வீதியை பாடசாலைக்கு முழுமையாக வழங்க வேண்டும் என கருத்து முன்வைக்கப்பட்டது. வெளி மாவட்டங்களில் இருந்து மண் எடுக்க வருகின்றவர்களை தடை செய்வது தொடர்பாக முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

## குருநாகல் மாவட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதில் பாரபட்சம்

குருநாகல் பதலகொட நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு பெரும் போகத்தின் போது வறட்சி காரணமாகப்பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதில் தாமதம் நிலவுவதாக பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பத்தாயிரம் ரூபா வழங்குவதற்கு பணிப்புரை வழங்கியிருந்தார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் ஒரு சாராருக்கே நஷ்ட ஈட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் நித்தவல்காவை,ஹிரிப்பிட்டிய உட்பட பல பிரதேசங்களின் விவசாயிகளுக்கு இன்னும் நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை என நித்தவல்காவை சிறு விவசாயிகள் சங்கத்தின் தலைவரும் முன்னாள் கிராம சபை உறுப்பினருமான எம்.எச்.எம். பாருக் தெரிவித்தார்.

## தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கு அனுப்பும் சுற்றறிக்கைகளை தமிழில் வெளியிடவேண்டும்

### இரத்தினபுரி முஸ்லிம் லீக் முன்னணி வேண்டுகோள்

(எம்.எல்.எஸ்.முஹம்மத் இரத்தினபுரி)

சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு மாகாணத்தில் உள்ள தமிழ் ,முஸ்லிம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் சுற்றறிக்கைகளை தமிழ் மொழியிலும் வெளியிடுமாறு இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் கல்விப் பிரிவு சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் மற்றும் கல்வியமைச்சர் பானு முனுப்பிறிய ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக சம்மேளனத்தின் கல்விப் பிரிவின் பணிப்பாளர் எம்.றீதான் ஆசிரியர் அவர்களினால் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் ஆகியோருக்கு தனிப்பட்ட மகஜர் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசாங்கத்தினால் சிங்களம் மற்றும் தமிழ் மொழி ஆகிய இரு மொழிகளும் அரச கரும மொழிகளாக அமுல்படுத்தப்பட்டு நாட்டின் சகல பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற இவ்வேளையில் சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் அதன் வலய கல்விப் பணிமனைகளால் வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் தனிச் சிங்கள மொழியில் மாத்திரமே வெளியிடப்பட்டு வருகின்றன.

இதனால் சிங்கள மொழி சரளமாகத் தெரியாத பல அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட ஊழியர்கள் பலரும் சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களை சரியாக அறிந்து கொள்வதிலும் அவற்றை செயற்படுத்துவதிலும் தொடர்ச்சியாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள இரத்தினபுரி மாவட்டத்தில் காணப்படும் அதிகமான தமிழ் முஸ்லிம் பாடசாலைகளில் கூடுதலான அளவில் சிங்கள மொழி அறவே தெரியாத வடக்கு ,கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர்.

சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்தில் மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக இரண்டுக்கு மேற்பட்ட தமிழ் பேசும் உயர் அதிகாரிகள் மற்றும் பல தமிழ் ,முஸ்லிம் ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளபோதிலும் தமிழ் மொழியின் அமுலாக்கம் தொடர்பாக இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையையிட்டு அனைத்து ஆசிரியர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் கடந்த பல வருடங்களாக இரத்தினபுரி மாவட்ட தமிழ் பேசும் சமூகங்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பாலமுனை சமூக நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் உதவிகள் வழங்கி வைப்பு





(அட்டாளைச்சேனை, அஷ்ரஃப் ரிஜாஸ் இஸ்லதீன், ஐ.எம்.ஹம்தான்)

பாலமுனை சமூக நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரிக்கு ஒரு தொகுதி அலுவலக உபகரணங்களையும், பாலமுனை பிரதேச வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் நன்மை கருதி நோயாளர்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்குவதற்கான உறைகளையும் (பேக்) வழங்கி வைக்கும் நிகழ்வு அமைப்பின் தலைவர் டாக்டர் ஏ.எல்.சுதைஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அல்ஹிதாயா மகளிர் கல்லூரி அதிபர் எஸ்.எம்.எம்.ஹனிபா, பாலமுனை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் டாக்டர் ஏ.எல்.மாஹிறுன், அமைப்பின் செயலாளர் .எம்.ஹம்தான் உட்பட பாடசாலை பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள், அமைப்பின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சமூக நலன்புரி அமைப்பானது பாலமுனை பிரதேசத்தில் கல்வி, சுகாதாரம், மற்றும் சமூகசேவை போன்ற பல்வேறு துறைகளின் அடிப்படையில் தமது சேவைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கடும் வெப்பம் காரணமாக
## அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் சிறுவர் போட்டிகள் இடைநிறுத்தம்

(ஒலுவில் நிருபர் அமீர்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் சிறுவர் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.எம் காசீம் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய மூன்று கோட்டங்களிலிருந்தும் தரம் - 03,04,05 இல் இருந்து ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் பத்து போட்டியாளர்கள் வீதம் ஆண், பெண் வெவ்வேறு இரு அணிகளாக மொத்தம் 2850 மாணவர்கள் வேகமாக தடை தாண்டல், முழங்கால் ஊன்றி எறிதல், குறுக்குப் பாய்ச்சல், குழுவாக நின்று தூரம் பாய்தல், கயிறு அடித்தல் ஆகிய ஐந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்விருந்தனர். பொத்துவில் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் பொத்துவில் மத்திய கல்லூரியில் 7 ஆம் திகதியும், அட்டாளைச்சேனை கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 13 ஆம் திகதி அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்திலும், அக்கரைப்பற்று கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் 20 ஆம் திகதி அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவிருந்தது.

நாட்டில் தற்போது உஷ்ணமான காலநிலை காரணமாக மாணவர்கள் பகல் நேரங்களில் விளையாட்டு மைதானங்களில் நிற்க முடியாத சூழ்நிலை காணப்படுவதனால் இவ் விளையாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளதாகவும் இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# மறிச்சிக்கட்டி வர்த்தமானி பிரகடனம் !

# ஜனாதிபதியுடனான முஸ்லிம் அமைப்புக்களின் சந்திப்பு

## ஒரு வெட்டு முகப் பார்வை

★ சுஐப் எம்.காசிம்

மறிச்சிக்கட்டி வர்த்தமானி பிரகடனம் தொடர்பில் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் முஸ்லிம் சிவில் அமைப்புக்களும் ஜனாதிபதியைச் சந்தித்து (2017.05.07) நடாத்திய பேச்சுவார்த்தையின் பிரதிபலனாக வர்த்தமானியை இரத்துச்செய்யக் கோரி, பாதிக்கப்பட்ட மக்கள் மறிச்சிக்கட்டி பிரதேசத்தில் தொடர்ச்சியாக 44 நாட்கள் மேற்கொண்டு வந்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று மாலை (2017.05.08) தற்காலிகமாக முடிவுக்கு வந்திருப்பது ஓர் ஆரோக்கியமான வெற்றியின் முதற்படிக்கல்லாகும்.

அதன் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் புவியியல் துறை விரிவுரையாளர் கலாநிதி ஏ.எஸ.எம்.நவ்பல், வில்பத்து பிரதேசம், மறிச்சிக்கட்டி, முசலி பிரதேசங்கள் அடங்கிய வரைபடங்கள், 2012 ம் ஆண்டு வர்த்தமானி பிரகடனத்தில் ஏற்பட்டிருந்த பிழைகள் (எல்லை நிர்ணய ஒருங்கிணைப்புப் புள்ளி) ஆகியவற்றை பல்லூடகம் வழியாக ஜனாதிபதிக்கு காண்பித்தார்.

இவற்றை பொறுமையுடனும் உன்னிப்பாகவும் அவதானித்த ஜனாதிபதி இடைக்கிடை சில சந்தேகங்களைத் தொடுத்தார். அமைச்சர்களான றிஷாட் பதியுதீனும், பைசர் முஸ்தபாவும் வர்த்தமானி பிரகடனங்களினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மக்கள் வாழும் குடியிருப்புப்பகுதிகள் வர்த்தமானி பிரகடனத்துக்குள் உள்வடக்கப்பட்டுள்ளதாக என்னை சந்திக்க வந்துள்ள முஸ்லிம் தலைவர்களும் அமைப்புக்களும் கூறுகின்றன இதன் உண்மை நிலவரம் என்னவென்று அவர் தொடர்புகொண்ட அதிகாரியொருவரிடம் கேட்ட போது அவரது பதிலில் தெளிவில்லாததை கூட்டத்தில் இருந்த நாங்கள் உணர்ந்து கொண்டோம். அந்த அதிகாரியுடன் ஜனாதிபதி மிகவும் கடும்தொனியில் பிழைநடந்திருந்தால் உரியவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடுமெனவும் தெரிவித்தார்.

அமைச்சர்களான பைசர் முஸ்தபா, றிஷாட் பதியுதீன், மற்றும் அசாத் சாலி, ஹில்மி அஹமட் ஆகியோர் மீண்டும் ஜனாதிபதியுடன் அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது வர்த்தமானி பிரகடனத்தால் முசலி பிரதேச முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை சந்திப்பில் பங்கேற்ற முஸ்லிம் பிரமுகர்கள் விலாவாரியாக தெளிவுபடுத்தினர். ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என்.எம்.அமீன் வடக்கு முஸ்லிம்களின் அவலங்கள், கடந்த காலங்களில் அவர்கள் சந்தித்த இடர்பாடுகள் நாட்டின் இறைமையைக் காப்பதற்கு இந்த மக்கள் செய்த தியாகம் 2012, 2017 ம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலால் எழுந்துள்ள சூழ்நிலைகள் குறித்து ஜனாதிபதிக்கு ஓர் அறிமுக விளக்கத்தை தெரிவித்தார்.









குறித்து சுட்டிக்காட்டியபோது ஜனாதிபதியும் தனக்குரித்தான பாணியில் ஜனாதிபதி என்ற தோரணையில் சில விடயங்களை முன்வைத்தார்.

மக்கள் குடியிருப்புக்களையோ அவர்கள் வாழும் பகுதிகளையோ உள்ளடக்கி தான் வர்த்தமானி பிரகடனத்தை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கவில்லை. ஏதோ நடந்திருக்கின்றது தமிழ் சிங்கள முஸ்லிமென்று கருதி வர்த்தமானி பிரகடனத்தை வெளியிடவில்லை சூழலை பாதுகாக்கும் பொறுப்பு எனக்கு உள்ளது. இவ்வாறு அழுத்தமான தொனியில் கூறிய ஜனாதிபதி அங்கிருந்தவாறு உயர் அதிகாரிகளிடம் தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தினார்.

ஜனாதிபதியிடம் சில விடயங்களை தொட்டுக்காட்டினர்.

1990ம் ஆண்டு விடுதலைப்புலிகள் முஸ்லிம்களை விரட்டுவதற்கு முன்னர் எவ்வாறு தமது பூர்வீக நிலங்களில் வாழ்ந்து எவ்வாறு தமது தொழிலுக்கு மேட்டு நிலங்களையும், வயல் நிலங்களையும் பயன்படுத்தினார்களோ அதே நிலைமை மீண்டும் எந்தவிதமான தடைகளுமின்றி ஏற்படுத்தித்தர வேண்டுமென அமைச்சர்கள் கோரினர்.

இதனைச் செவிமடுத்த ஜனாதிபதி ஏற்கனவே இந்த விடயம் தொடர்பாக மூவரடங்கிய சுயாதீனக்குழுவொன்றை நியமிக்கும் வகையில்; தனது செயலாளருக்கு அறிவுரை வழங்கியுள்ளதையும் நினைவுபடுத்தினார். இந்த சந்தர்ப்பத்தில் கருத்து தெரிவித்த றிஷாட், தன்னிடம் பிரதிநிதியொருவரை கேட்டிருப்பதாகவும் எனினும் இந்த ஆணைக்குழு சுயாதீனமாக இயங்கி எந்தப் பாரபட்சமுமின்றி விசாரணைகளை நடாத்தி உண்மை நிலைகளை கண்டறிவதன் மூலமே முசலிப்பிரதேச மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தான் இன்னும் தனது பிரதிநிதியை வழங்கவில்லை என்றார். எனினும் அமைச்சர் றிஷாட்டிடம் பிரதிநிதியின் பெயரை தருமாறு ஜனாதிபதி வேண்டினார்.

பல்வேறு கருத்துப்பரிமாறல்களின் பின்னர் எதிர்வரும் 13ம் திகதி உயர்மட்ட சந்திப்பொன்றை தனது செயலாளருடன் ஏற்படுத்தி உரிய தீர்வை பெற்றுக் கொள்ளும் வழிவகைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி தெரிவித்ததுடன் தனது செயலாளருடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஏற்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையிலேயே கவனயீர்ப்புப் போராட்டத்தை இடைநிறுத்துமாறு கோரிக்கை விடப்பட்டது.

மறிச்சிக்கட்டி விவகாரம் எழுந்ததன் பின்னர் ஏற்பட்ட சந்திப்புக்களைவிட இந்த சந்திப்பு வெற்றியின் உச்சக் கம்பத்தை தொடுவதற்கான வழிகளைத் திறந்துள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுற்றாடல் அமைச்சர் என்ற வகையில் ரஷ்யாவில் வைத்து இந்த பிரகடனத்தில் கைசாத்திட்ட போதும் அவர் இந்த இடத்தில் அமைச்சர் என்ற ஸ்தானத்துக்கு அப்பால் ஜனாதிபதியாகவும் இருப்பதால்தான் கையெழுத்திட்ட வர்த்தமானியை இரத்துச்செய்வதென்பதை நாம் எதிர் பார்க்க முடியாது. எனினும் இதன் பாரதூரத்தை அவர் உணர்ந்து அதில் ஏற்பட்டுள்ள தவறுகளை திருத்துவதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம்பெற்றுத்தர முடியும்.

எது எப்படி இருந்த போதும் 1990ம் ஆண்டுக்கு முன்னர் இந்த பிரதேச மக்கள் தங்கு தடையின்றி சுதந்திரமாக தமது வாழ்விடங்களில் எவ்வாறு வாழ்ந்தார்களோ அந்த நிலையை ஏற்படுத்துவதன் மூலம் இந்த பிரச்சினையை இலகுவாகத் தீர்க்க முடியும்.

இந்த இடத்தில் முக்கியமான ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது முசலி மக்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமென்பதில் அவர்களின் பிரதிநிதியான அமைச்சர் றிஷாட் பல வருடங்களாக இனவாதிகளுடன் போராடி வருகின்றார்.

இனவாத சிங்கள ஆங்கில இலத்திரனியல் அச்சு ஊடகங்கள் அவரை கேவலமாகவும் மோசமாகவும் ஏசுகின்றன. எனினும் அந்த மக்களின் பிரதிநிதி என்ற வகையில் அவற்றைத் தாங்கிக்கொண்டு சவால்களுக்கு முகம் கொடுத்து அவர் போராடுவது நியாயமே எனினும் கொழும்பிலே பிறந்து இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் அமைச்சர் பைசர் முஸ்தபா அசாத்சாலி , முஸ்லிம் கவுன்சில் தலைவர் என்.எம்.அமீன், உப தலைவர் ஹில்மி அஹமட், பி.எம்.பாருக் உட்பட முக்கியஸ்தர்கள் வடபுல சமூகத்துக்காக ஜனாதிபதியுடன் பேசிய பாங்கானது, அந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தவன் என்ற வகையில் என்னை மெய் சிலிர்க்கச் செய்தது

ஜனாதிபதியுடனான சந்திப்பு முடிவடைந்த பின்னர் பைசர் முஸ்தபாவும் அசாத் சாலியும் ஜனாதிபதியின் செயலாளருடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை எடுத்துக்கூறி இந்த விடயத்துக்கு முடிவு கட்ட வேண்டுமென உறுதியுடன் தெரிவித்தனர்.

வில்பத்து விடயம் எப்போது ஆரம்பித்ததோ அப்போது இருந்தே இந்த மக்களுக்காக குரல் கொடுத்து இரவு பகல் என்று பாராது பல்வேறு கூட்டங்களை ஏற்பாடு செய்து உதவிய ஜம்மியத்துல் உலமா மற்றும் 56 இயக்கங்களை உள்ளடக்கிய முஸ்லிம் கவுன்சில், சூரா கவுன்சில் உட்பட இன்னும் பல்வேறு இயக்கங்களுக்கும் இந்த நியாயமான போராட்டத்துக்கு உத்வேகமளித்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

---

# முஸ்லிம் தனியார் சட்டத்திருத்தமும் ஒரு சிலரின் குழப்பங்களும்

## சட்டத்தரணி வை.எல்.எஸ்.ஹமீத்



முஸ்லிம் தனியார் சட்டத்திருத்தம் சம்பந்தமாக நீண்டகாலமாக பேசப்பட்டு, அண்மைக்காலமாக அது சூடு பிடித்திருக்கின்றது. இத்திருத்தம் சம்பந்தமாக ஆறு வகையானோர் அக்கறை காட்டுகின்றனர்.

சில மேற்கத்திய சக்திகள், சில அரச சார்பற்ற நிறுவனங்கள் , பிரயோசனம் பெறுகின்ற பெண்ணியவாதிகள் அல்லது புத்திஜீவிகள் ( அவ்வாறு தங்களை அழைத்துக் கொள்பவர்கள்), மேற்கூறிய மூன்றும் ஒன்றோடொன்று தொடர்பாக இருக்க, இவற்றுடன் தொடர்பில்லாத, மார்க்கம் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டில்லாத, தங்களையும் புத்திஜீவிகளாக/ சிந்தனாவாதிகளாக கருதிக்கொள்கின்ற ஒரு கூட்டம்,

அப்பாவித்தனமாக இவர்களின் கருத்துக்களால் கவரப்படுகின்ற ஒரு கூட்டம், முஸ்லிம் தனியார் சட்டம் செயற்படுத்தப்படும்போது ஏற்படுகின்ற சில நடைமுறைப் பிரச்சினை காரணமாக இஸ்லாமிய வரையறைக்குள் நியாயமான சாத்தியமான சில திருத்தங்கள் மேற்கொள்வது நல்லதே, என்று நேர்மையாக சிந்திக்கின்ற ஒரு கூட்டம்

இதில் முதல் மூன்று பிரிவினரையும் பொறுத்தவரை அவர்கள் முஸ்லிம் சட்டத்தின் வலுத்தன்மையை அளவிட பயன்படுத்துகின்ற அளவுகோல் ''சர்வதேச மனித உரிமைகள்'' சட்டமாகும். முஸ்லிம் சட்டம் இந்த மனித உரிமைச் சட்டத்திற்கு ஏற்புடையதாக இருக்கவேண்டும்; என்பது அவர்களது நிலைப்பாடாகும். மாறாக அது இஸ்லாத்திற்கு ஏற்புடையதாக இருக்கவேண்டுமா? என்பதைப்பற்றி அவர்களுக்கு கவலையில்லை.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்றால் என்ன? அவை உண்மையில் சர்வதேச மனித உரிமைகள்தானா? அல்லது குறித்த சில பிரிவினர் தாங்கள் மனித உரிமைகள் என்று நம்புபவற்றை முழு உலகத்தின் மீதும் திணிக்க முற்படுகின்றார்களா? இவர்கள் இன்று அடையாளப்படுத்துகின்ற மனித உரிமைகளின் தோற்றுவாய் மற்றும் அதன் வளர்ச்சிப்பாதை என்ன? அது இன்று ? சர்வதேச மனித உரிமைகள்? என்ற அடையாளத்தை எவ்வாறு பெற்றுக்கொண்டது, இதனை முழு உலகமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றதா? இதற்கெதிரான விமர்சனங்கள் என்ன? குறிப்பாக இஸ்லாமிய உலகு இந்த சர்வதேச மனித உரிமைகள் என்பதனை எவ்வாறு பார்க்கின்றது? இன்று மனித உரிமைகளைப் போதிக்கின்ற மேற்கத்திய வல்லரசுகள் ? மனித உரிமைகளை மதிக்கின்றனவா? போன்ற கேள்விகளுக்கான விடைகள் இன்றைய இந்தக் குழப்பத்திற்கு தெளிவைத் தரும்.

### மனித உரிமை மற்றும் பெண்ணியம் பேசுகின்ற முஸ்லிம்கள்

பின்னணியில் மனித உரிமை பற்றியும் பெண்ணியம் பற்றியும் பேசுகின்ற சிலர் ''முஸ்லிம் திருமண, விவாகரத்து சட்டத்தை'' திருத்தவேண்டுமென்பதில் மிகவும் ஆக்ரோஷமாக இருக்கின்றார்கள். முஸ்லிம் சட்டம் திருத்தப்படக்கூடாதென்பதல்ல, ஆனால் அந்த திருத்தத்தின் வரையறை என்ன? என்பதில்தான் இன்று பிரச்சினைகள் இருக்கின்றன. முஸ்லிம் சட்டமென்பது இஸ்லாமிய வரையறைக்கப்பால் திருத்தப்பட முடியுமா? அவ்வாறு திருத்தினால் அது முஸ்லிம் சட்டமாகுமா? ஆனால் இன்று முஸ்லிம் சட்டம் திருத்தப்படவேண்டுமென்று கோஷமெழுப்புகின்ற பலர், இஸ்லாம் என்பதற்கும் இந்த முஸ்லிம் சட்டத்திற்கும் சம்பந்தமே இல்லை, என்பது போல் மனித உரிமைகளப் பற்றியே பேசுகின்றார்கள் அல்லது அவர்களது எஜமானர்கள் பேச வைக்கின்றார்கள்.

முஸ்லிம் சட்டம் முஸ்லிம்களுக்குரியது. அது இஸ்லாத்தின் அடிப்படையில் அமைய வேண்டியது. இஸ்லாத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மனித உரிமை என்று அவர்கள் அழைப்பவற்றைப் பற்றிக் கவலைப்படுபவர்களுக்கு பொதுச்சட்டம் இருக்கின்றது. முஸ்லிம் சட்டத்தை மனித உரிமைகள் என்ற பெயரில் பொதுச்சட்டத்திற்கு சமாந்திரமாக மாற்றவேண்டிய அவசியமில்லை.

இன்று நிலைமை எந்த அளவுக்கு முற்றி இருக்கின்றதென்றால், இவர்கள் விரும்புகின்ற விதத்தில் முஸ்லிம் சட்டத்தை மாற்ற உலமா சபை சம்மதிக்கவில்லை; என்பதற்காக, உலமா சபை கண்மூடித்தனமாக ஊடகங்களில் விமர்சிக்கப்படுகின்றது. உலமா சபை அறிவீனர்களைக் கொண்டது என்று விமர்சிக்கப் படுகின்றது. மேற்கத்திய மனித உரிமைகளைப் பற்றிப் படித்தவர்கள் அறிவாளிகள்!, இஸ்லாத்தைக் கற்றுத் தேர்ந்த உலமாக்கள், அறிவீனர்கள்! இந்த விமர்சனங்களும் இவர்களது ஆவேச நிலைப்பாடுகளும் மேற்கத்திய இஸ்லாத்திற்கெதிரான சிந்தனாவாதம் இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் கணிசமான அளவு முன்னேறியிருப்பதையே காட்டுகின்றது.

இறுதிக்காலத்தில் இஸ்லாம் பரதேசியாக இறைவனிடம் மீளும்; என்பதற்கான அறிகுறிகள் இவைகளோ தெரியவில்லை. உலமா சபை பிழை விட முடியாது; என்பதல்ல. ஆனால், அவ்வாறு ஷரீஆ விடயத்தில் பிழைவிட்டால், அதனைச் சுட்டிக் காட்டுகின்ற தகுதி ஏனைய ஷரீஆவைக் கற்ற உலமாக்களுக்கே இருக்க முடியும். மாறாக மேற்கத்திய மனித உரிமைகளைப் பற்றிப் படித்தவர்களுக்கல்ல.

ஒரு மருத்துவர் பிழையான சிகிச்சை செய்தால் அதனை இன்னொரு மருத்துவம் படித்த ஒருவர்தான் சுட்டிக் காட்ட முடியும். ஆகக்குறைந்தது குர்ஆன், சுன்னாவை ஆதாரம் காட்டியாவது இந்த மேதாவிகள் உலமாசபையின் நிலைப்பாட்டை பிழையென்றால், இஸ்லாத்தின் வரையறைக்குள் இவர்கள் இருக்க விரும்புகின்றார்கள்; இவர்களின் வாதம் ஏற்புடையதா? இல்லையா? என்பது ஒரு புறமிருக்க. என்று எடுக்கலாம்.

எனவே, இஸ்லாத்தைப் புறந்தள்ளி நீங்கள் கூறுகின்ற மனித உரிமைகளுக்கு இசைவாக ஒரு ''திருமண விவாகரத்து'' சட்டம் உங்களுக்குத் தேவைப்பட்டால் அரசாங்கத்திடம் கூறி ஒரு சட்டத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். அல்லது பொதுச் சட்டத்தை பாவித்துக் கொள்ளுங்கள். முஸ்லிம் சட்டம் என்பதே இஸ்லாத்தின் வரையறைக்குள் அது இருக்கும்வரை தான்; என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இஸ்லாத்தின் வரையறையைத் தாண்டினால் அதற்கு வேறு பெயர் வைக்க வேண்டும். என்பதையும் சிந்தியுங்கள்.

(எஸ். அஷ்ரப்கான்)

# தீவிரவாதிகளை அடக்காவிட்டால் நாடு புகுந்து தாக்குவோம்

## பாகிஸ்தானுக்கு ஈரான் எச்சரிக்கை



தீவிரவாதிகளை அடக்காவிட்டால் பாகிஸ்தானில் புகுந்து தாக்குதல் நடத்துவோம் என ஈரான் அரசு எச்சரித்துள்ளது.

பாகிஸ்தான் எல்லையிலிருந்து ஈரானுக்குள் புகுந்து தீவிரவாதிகள் சமீபத்தில் தாக்குதல் நடத்தினார்கள். பாகிஸ்தானுக்குள் இருந்து கொண்டே துப்பாக்கி சூடு நடத்தினர்.

அதில் ஈரான் இராணுவ வீரர்கள் 10 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலுக்கு பாகிஸ்தானில் இயங்கும் ஜெய்ஷ்-அல்-அடில் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது. அதைத் தொடர்ந்து பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு ஈரான் அரசு கடும் கண்டனம் தெரிவித்தது.

தீவிரவாதிகள் கொள்ளைக்காரர்கள். கோழைத் தனமான தாக்குதல் நடத்தியுள்ளனர். அவர்களை ஒழிக்க வேண்டும் என்று ஈரான் இராணுவ தலைமை தளபதி மேஜர் ஜெனரல் முகமது பக்ரி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாகிஸ்தான் எல்லைப்பகுதி தீவிரவாதிகளின் சொர்க்கபுரியாக திகழ்கிறது. அங்கு அவர்கள் முகாம்கள் அமைத்து பயிற்சி பெறுகிறார்கள்.

இதை ஈரான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. இந்நிலை மேலும் தொடரக் கூடாது. பாகிஸ்தான் அதிகாரிகள், தீவிரவாதிகள் எல்லை தாண்டுவதை தடுத்து நிறுத்தவேண்டும். அவர்களை கைது செய்து பயிற்சி முகாம்களை மூட வேண்டும்.

இல்லாவிடில் பாகிஸ்தானுக்குள் புகுந்து தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை நசுக்குவோம். அழித்து ஒழிப்போம் என எச்சரிக்கை விடுத்தார்.

எல்லையில் தீவிரவாதிகளின் ஆதிக்கம் இருப்பது ஈரானுக்கு கடும் தலைவலியாக உள்ளது. அங்கு போதை மருந்து கடத்தல் கும்பல், பிரிவினைவாத தீவிரவாதிகள் என்று தொடர்ந்து பிரச்சினை ஏற்படுகிறது.

எனவே ஈரான் வெளியுறவு அமைச்சர் முஹம்மது ஜாவீத் ஷரீப் கடந்த வாரம் பாகிஸ்தான் சென்று அந்நாட்டு பிரதமர் நவாஸ் செரீப்பை சந்தித்து ஈரான் எல்லையில் பாதுகாப்பை பலப்படுத்தும்படி வலியுறுத்தினார்.

# தென் சூடானில் அகதிகளாக 10 இலட்சம் குழந்தைகள்



தென் சூடானில் நடக்கும் உள்நாட்டுப் போரால் சுமார் 10 இலட்சம் குழந்தைகள் அகதிகளாக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு ஆபிரிக்க நாடான தென் சூடான் 2011ஆம் ஆண்டு சூடானிலிருந்து பிரிந்தது. அதன் பின்னர் இனவாரியாக பிளவுபட்ட தென் சூடானில், உள்நாட்டுப் போர் காரணமாக கடும் பஞ்சம் நிலவுகிறது.

இதனால் மக்கள் கூட்டம் கூட்டமாக அகதிகளாக தங்களது நாட்டுக்குள்ளாகவே இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் தென் சூடானில் நிலவும் உள்நாட்டுப் போர் காரணமாக 10 இலட்சம் குழந்தைகள் அகதிகளாகியுள்ளதாக ஐ.நா. நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில், ''தென் சூடானில் நிலவும் உள்நாட்டுப் போர் காரணமாக தொடர்ந்து பஞ்சம் நாடு முழுவதும் பரவி வருகிறது.

ஏராளமானோர் தங்களது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து வருகின்றனர். மேலும், 10 இலட்சம் குழந்தைகள் தங்கள் சொந்த நாட்டிலே அகதிகளாகியுள்ளனர். இதில் 75,000 பேர் தங்கள் குடும்பத்தினரை இழந்துள்ளனர். 75 சதவீத குழந்தைகள் தங்கள் பள்ளிப்படிப்பை நிறுத்தியுள்ளனர்''

கடந்த ஐந்து ஆண்டுகளாக தென் சூடானில் நடக்கும் உள் நாட்டுப் போர் காரணமாக 10,000இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 1000 பேர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகச் செய்திகள்

அயர்லாந்தில் 33ஆண்டுகளுக்கு முன்

## காணாமல் போன கடற்கரை மீண்டும் தோன்றிய அதிசயம்



அயர்லாந்தில் கடுமையான சூறாவளி காற்று மற்றும் கடல் சீற்றத்தால் 1984ஆம் ஆண்டு காணாமல் போன கடற்கரை, கடந்த மாதம் திடீரென தோன்றிய அதிசயம் அங்குள்ள மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அயர்லாந்திலுள்ள அசில் தீவிலுள்ள சிறிய கிராமம் டூவாக். இங்கு 300 மீற்றர் நீளத்தில் அழகான கடற்கரை இருந்தது. இங்கு சுற்றுலா பயணிகள் வந்து சென்று கொண்டிருந்தனர். ஹோட்டல், ஹெஸ்ட் ஹவுஸ், கஃபே போன்றவைகளுடன் கடற்கரை அழகாக காட்சியளித்தது.

கடந்த 1984ஆம் ஆண்டு திடீரென வசந்த கால சூறாவளி புயல் அடித்தது. கடலும் கொந்தளிப்பாக காணப்பட்டது. இதனால் கடற்கரையிலுள்ள டொன் கணக்கான மணல் காணாமல் போனது. கடற்கரையும் இருந்த இடம்தெரியாமல் போனது. பெரிய பெரிய பாறைகள் மட்டும் இருந்தன. ஆனால், ஆங்காங்கே குளம் போன்று தண்ணீர் தேங்கி கிடந்தது. இதனால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறையத் தொடங்கியது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததால் கடற்கரை அருகில் இருந்த ஹோட்டல், கஃபே, ஹெஸ்ட் ஹவுஸ்களும் மூடப்பட்டன.

இந்நிலையில் கடந்த மாதம் தொடர்ந்து 10 நாட்களாக ஆச்சரியமளிக்கும் வகையில், கடலில் வழக்கத்திற்கு மாறான அலை எழுந்தது. இந்த அலையானது, டொன் கணக்கில் மணல்களை கரைக்கு கொண்டு வந்து குவிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக காணாமல் போன கடற்கரை மீண்டும் உருவாகத் தொடங்கியது.

இந்த ஆச்சரியமான சம்பவத்தை கண்டு அங்குள்ள மக்கள் மிகவும் சந்தோசம் அடைந்துள்ளனர். மேலும், இந்த கடற்கரை நீண்ட ஆண்டுகளாக இப்படியே இருக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

## லிபிய படகு மூழ்கி 80 அகதிகள் பலி?

லிபிய கடற்பகுதியில் அகதிகள் படகொன்று விபத்துக்குள்ளானதில் 80 பேரைக் காணவில்லை. அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதுகுறித்து ஐ.நா.வின் அகதிகள் அமைப்பு தெரிவித்ததாவது:

பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 132 அகதிகள் இரப்பர் படகில் வெள்ளிக்கிழமை பயணத்தை தொடங்கியுள்ளனர். அவர்கள் பயணித்த சிறிது நேரத்திலேயே அந்தப் படகு லிபிய கடற்பகுதியில் மூழ்கத் தொடங்கியது.

அதில், 50 பேர் மட்டும் அப்பகுதியில் சென்ற வணிக கப்பலால் மீட்கப்பட்டனர். எஞ்சிய 80 பேர் காணாமல் போயுள்ளனர். அதில், பெண்களும், குழந்தைகளும் அடங்குவர். சம்பவம் நடந்து நான்கு நாட்களாகியும் காணாமல் போனவர்களின் கதி என்ன என்பது குறித்து தகவல் இல்லை.

அவர்கள் அனைவரும் தண்ணீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக ஐ.நா.வின் அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவில்...

## இஸ்லாமியருக்கு எதிரான மத துவேஷம்

### ஜகர்த்தா ஆளுநருக்கு 2 ஆண்டு சிறை





இந்தோனேசியாவில் இஸ்லாமியர்களுக்கு எதிரான மத துவேஷத்தை தூண்டிவிட்டதான குற்றச்சாட்டின்கீழ் அந்நாட்டின் தலைநகரான ஜகர்த்தா நகர ஆளுநருக்கு இரண்டாண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் இஸ்லாமிய சட்ட திட்டத்துக்குட்பட்ட ஆட்சிமுறை அமுலிலுள்ளது. அந்நாட்டின் தலைநகரான ஜகர்த்தா நகர ஆளுநராக பசுக்கி ஜுஹாராஜா புர்ணாமா என்பவர் பதவி வகித்து வருகிறார். இந்த பகுதியை கைப்பற்றிய இஸ்லாமியர் அல்லாத நபர் என்ற வகையில் சிறப்புக்குரியவராக அந்நாட்டு கிறிஸ்தவர்களால் மதிக்கப்படும் இவரை 'அஹோக்' என்று இவரது அபிமானிகள் அழைப்பதுண்டு.

சீன வம்சாவழியை சேர்ந்த கிறிஸ்தவரான இவர்மீது இஸ்லாமியர்களுக்கு எதிரான மத துவேஷத்தை தூண்டிவிட்டதான குற்றச்சாட்டின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடந்து வந்தது.

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தலைநகர் ஜகர்தாவிலுள்ள நீதிமன்றத்துக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்நிலையில், பிற மதத்தினரின் உணர்வுகளை காயப்படுத்தும் வகையில் நடந்து கொண்டதற்காக பசுக்கி ஜுஹாராஜா புர்ணாமாவுக்கு இரண்டாண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். இந்த தீர்ப்பு பற்றிய தகவல் வெளியானதும், நீதிமன்றத்தின் அருகே குழுமியிருந்த அவரது ஆதரவாளர்களில் சிலர் வாய்விட்டு கதறியழுதனர்.

இந்த தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யப் போவதாக பசுக்கி ஜுஹாராஜா புர்ணாமா தெரிவித்துள்ள நிலையில், தற்போது வெளியாகியுள்ள இந்த தீர்ப்பு இந்தோனேசியாவில் வாழும் சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி விடும் என இங்குள்ள மனித உரிமை அமைப்புகள் குற்றம்சாட்டியுள்ளன.

## இங்கிலாந்து ராணிக்கு பிறந்தநாள் அழைப்பு விடுத்த இந்திய சிறுவன்



இங்கிலாந்தின் வெஸ்ட் மிட்லேண்ட்ஸ் பகுதியில் இந்திய வம்சாவளி சிறுவன் ஷான் டூலே தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறான். 4 வயதான ஷானுக்கு ஜூன் 25ஆம் திகதி 5ஆவது பிறந்தநாள் வருகிறது. இந்த பிறந்தநாளில் இங்கிலாந்து ராணி எலிசபெத் பங்கேற்க வருமாறு சிறுவன் கடிதம் எழுதினான். இந்த கடிதம் கடந்த 3ஆம் திகதி ராணிக்கு கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சிறுவனுக்கு ராணி பதில் கடிதம் அனுப்பியுள்ளார். அதில்,

''எனக்கு நிறைய பணிகள் உள்ளதால் உன் அழைப்பை ஏற்க முடியவில்லை. என்னைப் பற்றி உனது எண்ணங்களை பாராட்டுகிறேன். உனது பிறந்தநாள் மகிழ்ச்சியாக இருக்கும் என்றும் நம்புகிறேன் '' என்று குறிப்பிட்டிருந்தார். இந்த கடிதம் சிறுவனுக்கு நேற்றுமுன்தினம் கிடைக்கபெற்றுள்ளது.

## முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தினருக்காக லிபியாவிலிருந்து எகிப்துக்கு ஆயுத கடத்தல்

### 15 லொறிகள் மீது விமான தாக்குதல்



எகிப்தில் உள்நாட்டு போரில் ஈடுபட்டுவரும் முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தினருக்காக லிபியாவிலிருந்து பயங்கர ஆயுதங்களை கடத்திவந்த 15 லொறிகள் மீது எகிப்து போர் விமானங்கள் குண்டு தாக்குதல்மேற்கொண்டுள்ளன.

எகிப்தில் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்பட்ட முதல்ஜனாதிபதி முஹம்மது முர்ஸி. முப்பதாண்டுகளுக்கும் மேலாக பதவியிலிருந்த ஹோஸ்னி முபாரக்கை கடந்த 2012ஆம் ஆண்டில் பதவியிலிருந்து இறக்கிவிட்டு ஜனாதிபதி பதவியைப் பிடித்த மொர்ஸியால் ஓராண்டுக்கு மேல் அந்தப் பதவியில் நீடிக்க முடியவில்லை.

எகிப்தின் இராணுவத் தலைவராவிருந்த அப்டெல் சிசி, மொர்ஸியை பதவியிலிருந்து இறக்கி கைது செய்து சிறையிலும் அடைத்தார். அவர்மீது பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

அவருக்குத் துணை புரிந்த முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணையை எதிர்நோக்கி காவலிலுள்ளனர். இவர்களில் பலருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் ஒரு பிரிவினர் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்திலும் பங்கேற்று வருகின்றனர். அரசுப் படைகளுடன் அடிக்கடி மோதும் இவர்கள் பெரும் உயிர் சேதத்தை ஏற்படுத்துகின்றனர்.

இந்நிலையில், அண்டை நாடான லிபியாவிலிருந்து முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தினருக்கு ஏராளமான ஆயுதங்கள் அனுப்பப்படுவதாக எகிப்தின் உளவுப் படை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் வந்தது.

இதையடுத்து, லிபியா - எகிப்து எல்லைப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. அதையும் மீறி லிபியாவிலிருந்து பயங்கர ஆயுதங்களை கடத்திவந்த 15 லொறிகளை எகிப்து விமானப்படை குண்டுகளை வீசி தாக்கி அழித்த வீடியோ காட்சிகளை அந்நாட்டு ஊடகங்கள் நேற்று வெளியிட்டுள்ளன.

## தென்கொரிய ஜனாதிபதித் தேர்தல்: சூடுபிடிக்கும் வாக்குப்பதிவுகள்



தென் கொரிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான தேர்தலின் வாக்குப்பதிவுகள் தொடங்கியுள்ளன. முன்னாள் குடியரசுத் தலைவர் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்ததை தொடர்ந்து அவர் பதவி விலகினார்.

தென் கொரியாவில் குடியரசுத் தலைவராக இருந்த பார்க் கியூன்-ஹை மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்ததை தொடர்ந்து அவர் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து அங்கு குடியரசுத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன் படி வாக்குப்பதிவுகள் தொடங்கியுள்ளன.

பரபரப்பான சூழலில் நடைபெறும் இந்த தேர்தலில் மூன் ஜே-இன் மற்றும் அன்-சியோல்-சூ களத்தில் உள்ளனர்.

முந்தைய அரசு மூலம் ஏற்பட்டிருக்கும் பின்னடைவை சரி செய்வதாக மூன் தனது இறுதி பிரசாரத்தின் போது உறுதியளித்திருந்தார். இதோடு அன்-சியோலும் வெற்றி பெறுவேன் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தென் கொரிய வரலாற்றில் முதன்முறையாக ஊழல் குற்றச்சாட்டை தொடர்ந்து பார்க் கடந்த மார்ச் மாதம் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டதை போன்று வாக்குப்பதிவுகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் தற்சமயம் வரை 26 சதவீதம் பேர் வாக்களித்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

காரியாலயத்தை இடமாற்ற மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் குறித்து அம்பாறை முஸ்லிம் பிரதேச மக்கள் கவலை கொண்டுள்ளதாகவும் இவ்வாறானநிலை ஏற்பட்டால் அந்தப் பிரதேச மக்களுக்கு காரியங்களை நிறைவேற்றுவதில் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகுமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு இது தொடர்பான எழுத்துமூல கடிதமொன்றையும் அமைச்சர் றிஷாத் சமர்ப்பித்தார். இந்தவிடயங்களை கேட்டறிந்த பின்னர் காரியாலயத்தை இடமாற்றப் போறில்லை என்ற உறுதி மொழியை அவர் வழங்கினார்.

இதுதொடர்பில் ஏற்கனவே அம்பாறை மாவட்டமக்கள் காங்கிரஸ் பிரமுகர்கள் அமைச்சர் றிஷாத் பதியுதீனை சந்தித்து கல்முனைக் கிளைக் காரியாலயம் மாற்றப்படும் முயற்சிகள் குறித்து எடுத்துரைத்தமை குறிப்பிடத்தக்கது.

## கீதாவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாராளுமன்ற அமர்வுகளின் கலந்துகொண்டிருந்தபோது, மேற்படி தீர்ப்பு தொடர்பில் தனக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்படும்வரை கீதா சபை அமர்வுகளுக்கு வருகை தருவதில் தடையில்லை என சபாநாயகர் கருஜயசூரிய சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை கீதாவின் பாராளுமன்ற ஆசனம் வெற்றிடமாகி விட்டது என்று பாராளுமன்ற செயலாளர் நாயமான டபிள்யு.பி.டி. தசநாயக்கவினால் தேர்தலைகள் ஆணையகத்துக்கு கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான கீதா குமாரசிங்க உயர்நீதிமன்றில் மனுவொன்றையும் தாக்கல் செய்துள்ளார் என்று அறியக்கிடைத்துள்ளது.

மேலும், இந்த வெற்றிடத்துக்கு காலி மாவட்டத்திலிருந்து முன்னாள் அமைச்சரான பியசேன கமகே நியமிக்கப்படுவார் என்றும் சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 5 மாத...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்-ளதாவது,

நாட்டில் இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் 42141 பேர் டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். குறித்த நோயினால் பாதிக்கப்பட்ட 90 பேர் இதுவரையில் இறந்துள்-ளனர். அதனடிப்படையில் இந் நோயினால் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 9218 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 5485 பேரும் காலி மாவட்டத்தில் 1856 பேரும் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2410 பேரும் திருக்கோணமலையில் 4095 பேரும் கண்டறி-யப்பட்டுள்ளனர். அத்துடன் களுத்துறையில் 2471 பேரும் குருணாகலையில் 1848 பேரும் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டு சிகிச்சைப் பெற்றுள்ளனர்.

இதே வேளை கடந்த வருடத்தின் முற்பகுதியில் பதிவாகிய டெங்கு நோயாளர்களை காட்டிலும் இம்முறை அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 16ஆயிரத்து 500 டெங்கு நோயாளர்களே இனங்காணப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த டெங்கு நோயினை கட்டுப்படுத்துவதற்கு நாடளாவிய ரீதியில் அமைச்சினால் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## இலங்கை நாணயத்தில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

என குற்றம் சுமத்தியுள்ள ஒருங்கிணைந்த எதிரணியினர், இது விடயம் குறித்து உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து பொரளையில் அமைந்துள்ள வஜிரசர்மா பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்தன,

ஒருங்கிணைந்த எதிர்கட்சியில் அங்கத்துவம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினரான கீதா குமாரசிங்க இரட்டை பிரஜாவுரிமையை கொண்டுள்ளதால் அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு தகுதியற்றவரென மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் தீர்பொன்றினை வழங்கியிருந்தது. இதற்கெதிராக அவர் தற்போது உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடும் செய்துள்ளார்.

எனினும், இப்படியாக இரட்டை பிரஜாவுரிமை கொண்ட அர்ஜுன மகேந்திரன் தான் மத்திய வங்கியின் ஆளுநராகவே செயற்பட்டார். மத்தியவங்கியின் முன்னாள் ஆளுனரான இவர் இலங்கையின் பிரஜையல்ல என்பதை நாம் பலமுறை சுட்டிக்காட்டியிருந்தோம். பிணைமுறி விவகாரத்தில் பாராளுமன்ற கோப் குழுவுக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தான் ஒரு இலங்கை பிரஜையல்ல மற்றும் ஆளுநராக சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவில்லை என்பதை அவரும் ஒத்துக்கொண்டுள்ளார்.

இலங்கை அரசியலமைப்பின் 105 ஆவது உறுப்புரையின் பிரகாரம் மத்தியவங்கியின் ஆளுனராக தெரிவு செய்யப்படும் நபர் சத்தியபிரமாணம் செய்யவேண்டுமென தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கைப் பிரஜையல்லாத அர்ஜுன மகேந்திரன் எவ்வாறு மத்தியவங்கியின் ஆளுனராக இருந்திருக்க முடியும்? பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மத்தியவங்கியின் ஆளுனராக நியமிக்கப்பட்ட அர்ஜுன மகேந்திரன் இலங்கைப்பிரஜையல்லாத, மத்தியவங்கியின் ஆளுனராக சத்திய பிரமாணம் செய்துக் கொள்டத நிலையில் எவ்வாறு இலங்கையின் நாணயத்தில் அவரது கையொப்பம் இடம்பெற்றது?

இரட்டை பிரஜாவுரிமை கொண்ட கீதா குமாரசிங்கவுக்கு பாராளுமன்ற உறுப்பிராக இருப்பதற்கு தகுதியில்லையென தீர்ப்பளிக்கும் நீதிமன்றம் முன்னாள் ஆளுனர் அர்ஜுன மகேந்திரன் விடயத்தில் எவ்வாறானதொரு தீர்ப்பினை வழங்கவுள்ளது?

அரசு இவ்வாறானதொரு கொள்கையினை பின்பற்றுமாயின் எதிர்காலத்தில் பொலிஸ்மா அதிபர், இராணுவதளபதி, பிரதமநீதியரசர் போன்ற முக்கிய பதவிகளுக்கும் வெளிநாடு பிரஜைகளை நியமிக்;கும் வாய்ப்பு ஏற்படுமா எனும் சந்தேகம் மக்கள் மனதில் தோன்றலாம். எனவே தான் இவ்விடயம் குறித்து உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்ய நாம் தீர்மானித்துள்ளோம் என்றார்.

## கீதாவின் எம்.பி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமர்வுகளுக்கு வருகைத் தரக்கூடிய நிலைமை ஏற்படும். ஆனால் இவரின் வெற்றிடத்துக்கு புதிய உறுப்பினர் ஒருவர் வெகு விரைவிலேயே நியமிக்கப்படுவார் என்று தற்போது கூறப்பட்டுள்ளது.

இப்படியாயின் ஒரு ஆசனத்துக்கு இரு உறுப்பினர்கள் எனும் சட்டச்சிக்கல் ஏற்படக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. 1977 பாராளுமன்றிலும் கலவானத் தொகுதி ஆசனத்திலிருந்து சரத்முத்தெட்டுவேகம நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த ஆசனத்துக்கு நியமிக்கப்பட்ட பிலப்பிட்டியவுக்கு மேற்படி வழக்கு மேன்முறையீட்டு விசாரணையில் சரத்முத்தெட்டுவேகம வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இராஜினாமா செய்துக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டது.

அப்போது நாட்டையே பெரிதும் பரபரப்புக்கு உள்ளாக்கிய இதனைப் போன்ற தொருச்சட்டச் சிக்கலே கீதா விடயத்திலும் ஏற்பட்டுள்ளது. எனினும் கீதாவின் மனு உயர்நீதிமன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தடையுத்தரவு பிறப்பிக்கப்படுமானால் புதிய உறுப்பினர் ஒருவரின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்படாது என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தேர்தலுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேரத்தைச் செலவிட வேண்டும். மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து தொகுதிகளில் மேற்கொள்ளப்படக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கலந்துரையாட வேண்டும்.

எந்த தேர்தலுக்கு ஐ.தே.க. தயாராக இருக்க வேண்டும்.

தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டோ கூட்டணி வைத்துக் கொள்ளாமலோ கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கடுமையாக உழைக்க வேண்டும்.

தேசிய அளவிலான தேர்தல்களுக்கு முன்னதாக உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும் அவர் கூறினார்.

## அமைச்சரவையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

தொழில் அமைச்சரான ஜோன் செனவிரட்ன நல்லாட்சி அரசில் இருந்துகொண்டே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன குற்றச்சாட்டை முன்வைத்துள்ளமையால் இருவருக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டது. நேற்றைய (நேற்றுமுன்தினம்) அமைச்சரவைக் கூட்டத்திலும் இந்த விடயம் பேசு பொருளாக இருந்ததோடு ஜனாதிபதியும் கவலை வெளியிட்டிருந்தார். எனினும், இருவருக்கும் இடையிலான இந்தக் கருத்து மோதலானது தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான முரண்பாடுகள் ஏற்படாதவகையில் இருகட்சிகளும் செயற்பட வேண்டும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

அதற்கிணங்க, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஏற்படும் சில கருத்து முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ள, சுதந்திரக் கட்சியில் இருந்து இணை அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவரை வெகுவிரைவிலேயே நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, விரைவிலேயே அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கு ஜனாதிபதியும், பிரதமரும் தற்போது இணங்கியுள்ளனர். அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவது ஒன்றும் புதுமையான விடயம் அல்ல. மஹிந்த அரசு அமையப்பெற்று ஒரு வருடத்திலேயே அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதபோல் 1994 ஆம் ஆண்டு சந்திரிகாவின் அரசு அமையப் பெற்று மூன்று மாதங்களிலும்; அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன என்றார்.

வெசாக் போயா தினத்துக்கு முன்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படும் என்று ஜனாதிபதி கடந்த மாதம் பத்திரிகைப் பிரதானிகளை சந்தித்தபோது தெவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோடி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் பயணிக்கும் பிரதான வீதிகளும் அதனுடன் இணையும் ஏனைய உள் வீதிகளும் முழுமையாக மூடப்படும் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கை வாயிலாக குறிப்பிட்டுள்ளது.

அந்தவகையில் நாளை வியாழக்கிழமை முதல், மாலை 6.15 மணிக்கு கட்டுநாயக்க அதிவேக வீதி, பேலியகொட, பொரளை பேஸ்லைன் வீதி, டி.எஸ் கல்லூரி போக்குவரத்து ஒளி சமிக்ஞை சந்தி, கிரீன் பார்க், தாமரைத் தடாகம், பொதுநூலகச் சுற்றுவட்டம், ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, மல் வீதி, பித்தளை சந்தி, ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கங்காராம எல்லை ஆகிய வீதிகள் மூடப்படவுள்ளன.

பின்னர், இரவு 7.15 மணிக்கு கங்காராம எல்லையிலிருந்து நவம் மாவத்தை, உத்தரானந்த மாவத்தை, முகம்மது மாக்கான் மார்க்கார் மாவத்தை, காலி முகத்திடல் சுற்றுவட்டம், தாஜ் சமுத்ரா ஹோட்டல் வரையான வீதிகளும் இரவு 08.20 மணி முதல் தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இருந்து காலி முகத்திடல் வீதி, ரவுண்டானாவில், என்.எஸ்.ஏ சுற்றுவட்டம், ஜனாதிபதி மாளிகை வீதி ஆகியனவும் மூடப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து இரவு 10.30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையிலிருந்து என்.எஸ்.ஏ சுற்றுவட்டம், காலி முகத்திடல் வீதி ஊடாக தாஜ் சமுத்ரா ஹோட்டல் வீதி ஆகியவை மூடப்படும் என்றும் பொலிஸ் அறிவித்துள்ளது.

அத்தோடு, 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று காலை 9.05 மணிக்கு தாஜ் சமுத்ர ஹோட்டல் வீதி, காலி முகத்திடல் சுற்றுவட்டம், கொள்ளுப்பிட்டி சந்தி, லிபர்ட்டி சந்தி, பித்தளை சந்தி, செஞ்சிலுவை சந்தி, பொது நூலக சுற்றுவட்ட வீதி, க்ளாஸ்ஹவுஸ் சந்தி, நந்தா மோட்டார்ஸ், சுதந்திரசதுக்க சுற்றுவட்டம், சுதந்திர மாவத்தை, பௌத்தாலோக மாவத்தை, மெட்லாந்ட் பிளேஸ் சந்தி, பௌத்தாலோக மாவத்தை ஊடாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வீதி ஆகியனவும் காலை 10.50 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வீதி, பௌத்தாலோக மாவத்தை, ஜாவத்தை சந்தியால் இடது பக்கம் திரும்பும் ஜாவத்தை வீதி, கெப்பட்டிபொல சந்தியால் வலது பக்கம் திரும்பி கெப்பட்டிபொல மாவத்தை ஊடாக பொலிஸ் மைதானம் வரையான வீதிகளும் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதிகளின் ஒரு பக்க வழியில் பயணிப்பதற்கும் அனுமதிக்கப்படமாட்டாது என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அதேநேரம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கட்டுநாயக்க அதிவேக வீதியூடாக களனி பாலம் நுழைவினால் பேஸ்லைன் வீதிக்கு வரும் வரை அதாவது, பிற்பகல் 5.45 மணி முதல் கட்டுநாயக்க அதிவேகப் பாதையின் கட்டுநாயக்கவிலிருந்து கொழும்பு நோக்கிய வீதி மூடப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளகப் பொறிமுறை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இருக்கும் என்று முன்னாள் ஜனாதிபதியான சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளிவிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளிவிட்ட அவர்,

நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான கலந்தாலோசனை செயலணி சுயாதீனமான அமைப்பென்பதால் வெளிநாட்டு நீதிபதிகளை பயன்படுத்துவது தொடர்பில் அவ்வமைப்பானது இலங்கை அரசின் ஆலோசனைகளை பெறவேண்டிய அவசியமில்லை. அவர்களது அறிக்கையிலும் வெளிநாட்டு நீதிபதிகளுடன் கூடிய பொறிமுறை அவசியம் என்பதே தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், இவ்வமைப்பின் குறித்த யோசனையை அரசு இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயம் கிடைக்கும் வகையில் காணாமல் போனோர் தொடர்பில் ஆராய வேண்டியது நல்லிணக்கத்துக்கான முக்கிய பங்காக அமைகின்றது. யுத்தத்தில் பொது மக்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கான நீதிகிடைக்க வேண்டியதும் முக்கியமான விடயமாகும்.

ஆனால், வெளிநாட்டு நீதிபதிகள் என்ற விடயத்தினை முன்நிறுத்தி கடந்த அரசிலுள்ள சில உயரதிகாரிகள் தம்மீதுள்ள குற்றச்சாட்டை திசைதிருப்ப பார்க்கிறார்கள்.

இராணுவத்தினரை மின்சார கதிரைக்கு அனுப்புவதாகவும், நாட்டை காட்டிக்கொடுப்பதாகவும் கதைகளை கூறி அரசுக்கு சிக்கலை ஏற்படுத்து முயல்கிறார்கள்.

வெளிநாட்டு நீதிபதி ஒரு சிலரை உள்ளடக்கிய விசாரணை பொறிமுறை தெளிவானதும் நம்பிக்கைதன்மை பொருந்தியதுமாக அமையும் என்பது தான் எனது தனிப்பட்ட கருத்தாகும். எனினும், இவ்விடயத்தில் அரசே முடிவெடுக்க வேண்டும்.

மேலும், இவ்விடயம் தொடர்பில் புலம்பெயர் மக்களின் கூச்சல்களைக் கண்டுகொள்ளாது பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் தமிழ் மக்களின் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த ஆட்சிகாலத்தில் இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனம் கேள்விக்குள்ளாக்கப்பட்ட காரணத்தினாலேயே தற்போதும் சர்தேச மட்டத்தில் இலங்கையின் நீதி சுயாதீனம் தொடர்பில் ஐயப்பாடொன்று நிலவிவருகிறது.

அதனால் தான் இலங்கையின் உள்ளகப் பொறிமுறையிலும் வெளிநாட்டு நீதிபதிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்ற யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்விடயம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளே மக்களுக்கு சரியான புரிதலை ஏற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

தமது
## முஸ்லிம்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைப்பு இயங்கிக் கொண்டிருப்பதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

மேலும், தமது அமைப்பு அமைதியடையவில்லையெனவும், தொடர்ந்து இயங்கிக் கொண்டு வருவதாகவும் தெரிவித்த அவர், இந்நாட்டில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தால் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், இலங்கையில் தங்க வைக்கப்பட்டுள்ள மியன்மார் ரோஹிங்கியா முஸ்லிம் உடனடியாக அவர்களது நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும். அகதிகள் என்ற போர்வையில் முஸ்லிம்கள் இலங்கையை ஆக்கிரமிப்பதற்கு அரசு இடமளிக்கக் கூடாது. எனவே கடலோர பாதுகாப்பு பலப்படுத்த வேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த அவர், மியன்மாரிலிருந்து அகதிகள் என்ற பெயரில் இலங்கைக்கு தஞ்சமடைந்துள்ளவர்கள் ஆட்கடத்தலில் ஈடுபட்டுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் இலங்கையிலுள்ள முஸ்லிம்களினது சிந்தனை போக்கு இந்நாட்டுக்கு மிகப் பெரிய ஆபத்தை உண்டு பண்ணும் எனவும் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள பொதுபல சேனாவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுபலசேனாவின் ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

10 வருடங்களுக்கு முன்பு ரோஹிங்யாவில் பௌத்த முஸ்லிம் கலவரங்கள் நடக்கவில்லை. ஆனால் அவர்கள் இது எமது நாடு என்று கூறி பௌத்த மதகுருமாரையும் பௌத்தர்களையும் தாக்க முற்பட்டதனாலேயே பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. பங்களாதேஷிலிருந்து ரோஹிங்யாவுக்கு முஸ்லிம்கள் செல்கிறார்கள். இதனால் அங்கு முஸ்லிம் சனத்தொகை அதிகரித்துள்ளது.இந்நிலையில் சர்வதேச ஊடகங்கள் பௌத்தர்களை தீவிரவாதிகளாக பிரச்சாரம் செய்து வருகின்றன.வரலாற்றை மறந்து, உண்மையை மறைத்து புதிய வியாபாரமாக இந்த இஸ்லாமியவாதம் அரங்கேறி வருகின்றது.ஊடகங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் கூட பௌத்த மதத்துக்கு எதிரான பிரச்சாரங்களை மேற்கொண்டு சர்வதேச அகதிகள் சட்டம் என்ற போர்வையில் சுதந்திரமாக இவ் இஸ்லாமிய வாதத்தை பரப்ப இவ் ஆட்கடத்தலை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிப்பதே பௌத்த தர்மத்தின் போதனையாகும்.அதுதொடர்பில் நாம் இன, மத, மொழி வேறுபாடின்றி உதவுவதற்கு தயாராகவுள்ளோம்.ஆனால் கடந்த சில வாரங்களுக்கு முன் வடக்கு கடற்பரப்பில் ரோஹிங்கிய முஸ்லிம்கள் என்ற பெயரில் மியன்மார் அகதிகளாக கைது செய்யப்பட்டு தற்போது மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன என்றார்.

அத்துடன், கிழக்கில் எங்களுக்கென்று புராதன வரலாறு ஒன்று இருக்கிறது. தொல்பொருள்கள் பரந்து கிடக்கின்றன. என்றாலும் அங்கே சிங்களவர்கள் அகதிகள் போன்றே வாழ்க்கை நடத்துகிறார்கள். முஸ்லிம் அடிப்படைவாதிகள் எப்போதும் அவர்களை எதிர்த்து வருகிறார்கள். எங்களது காணிகளை அபகரித்திருக்கிறார்கள். அரசாங்கமோ கிழக்கு மாகாண முதலமைச்சரோ இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவில்லை. ஆனால் கிழக்கு மாகாண முதலமைச்சர் எங்கிருந்தோ வந்த முஸ்லிம் அகதிகளை கிழக்கில் குடியேற்ற முயற்சிக்கிறார்.

இவர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேறுவதற்கு அல்லது வில்பத்துவில் குடியேறுவதற்கு வந்திருக்க வேண்டும். ரோஹிங்யா முஸ்லிம்கள். அவர்களது நாட்டிலே பௌத்தர்களுக்கு எதிராக செயற்படுபவர்கள். இவர்களைப் பற்றி அறியாது கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்களை கிழக்கில் அல்லது நாட்டில் எங்காவது குடியேற்ற வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்தார்.அத்துடன் கிழக்கு முதலமைச்சரினால் முன்னெடுக்கப்படுகின்ற இம் மனித ஆட்கடத்தல் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் அதிக கவனம் செலுத்தவேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில், தேசிய ஷூரா கவுன்ஸில் போன்ற அமைப்புக்கள், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இலங்கையில் முஸ்லிம்களுக்குப் பிரச்சினை முஸ்லிம்கள் தாக்கப்படுகிறார்கள், பள்ளிவாசல்கள் தாக்கப்படுகின்றன, பௌத்தர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதால் பீதியுடன் வாழ்கிறார்கள் என்றெல்லாம் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் எமது அமைப்பு தொடர்பிலும், பௌத்த மக்கள் தொடர்பிலும் பொய்யான பிரச்சாரம் செய்து வருகின்றனர். வெளிநாட்டு நிதி உதவியுடன் செயற்பட்டு வருகின்ற இந்த முஸ்லிம் அமைப்புக்களும், தலைவர்களும், பௌத்த நாடாகிய இலங்கையை முஸ்லிம் அகதிகளை அனுப்பி வைக்கின்ற மத்திய நிலையமாக மாற்றுவதற்கு முயற்சி செய்து வருகின்றமை தலைவிதியாகும்.

மியன்மாரில் இடம்பெற்றுவருகின்ற பிரச்சினைகள் காரணமாக இவர்கள் அகதிகளாக வந்துள்ளதை நாம் ஏற்க தயாரில்லை.பங்களாதேஷிலிருந்து இந்தியாவிற்கு தப்பித்து வந்து 4 வருடங்கள் அங்கு வாழ்ந்துவிட்டு ஆட்கடத்தல் என்ற பெயரில் சட்டவிரோதமான முறையில் இடம்பெயர்ந்துள்ள இவர்களை இலங்கையின் மன்னார், வில்பத்து மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் தங்க வைப்பதே இவர்களின் குறிக்கோளாக அமைந்துள்ளது.பங்களாதேஷிலிருந்து முஸ்லிம்கள் பௌத்த மத குருக்கள் போல் வேடமிட்டு காவியுடை அணிந்து இலங்கை வந்து தங்கியிருக்கிறார்கள். பாதுகாப்பு பிரிவினரதும் உளவுப் பிரிவினரதும் தகவலின்படி இந்தியாவில் 14 ஆயிரம் பேர் அகதிகளாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். சவூதி அரேபியா அகதிகளுக்கு புகலிடம் வழங்குவதற்கு மறுத்துள்ள நிலையில் ஏன் நாம் அவர்களுக்குப் புகலிடம் வழங்க வேண்டும். எனவே மியன்மார் அகதிகள் உடனடியாக நாட்டிலிருந்தும் வெளியேற்றப்பட வேண்டும் என்றார்.

வெளிநாடுகளிலிருந்து தொடர்ந்து முஸ்லிம்கள் அகதிகளாக வந்து குடியேறுகிறார்கள். நீர்கொழும்பில் மாத்திரம் 1500 பேர் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் போதைப்பொருள் விற்பனை போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களால் எமது கலாசாரம் பாதிக்கப்பட்டுள்ளது.பல்வேறு நாடுகளிலிருந்தும் முஸ்லிம்கள் இலங்கைக்கு வந்து தங்கியிருக்கிறார்கள்.இந்த விடயங்களை நாம் எடுத்துச் சொன்னால் நாம் சதி செய்பவர்கள், இனக்கலவரத்தை உருவாக்க முயற்சிப்பவர்கள் என எம் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.எனவே நாட்டின் கடலோரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த பாதுகாப்பு பிரிவினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## லங்காஷயர் அணியில் மஹேல ஒப்பந்தம்

இங்கிலாந்தின் நெட்வெஸ்ட் 20க்கு இருபது தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்தின் லங்காஷயர் அணியுடன் இலங்கை அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வீரருமான மஹேல ஜயவர்தன ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் பிரதான 20க்கு இருபது தொடராக நடைபெறும் இப்போட்டியில், இங்கிலாந்திலுள்ள அனைத்து பிராந்திய அணிகளும் களமிறங்கவுள்ளன. இதன்படி, ஐ.பி.எல் போட்டித் தொடர் நிறைவடைந்த பிறகு லங்காஷைர் அணியுடன் மஹேல இணைந்துகொள்ளவுள்ளார்.

இம்முறை ஐ.பி.எல். தொடரின் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக கடமையாற்றிவருகின்ற மஹேல, பாகிஸ்தான் நடத்தும் பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் கராச்சி கிங்ஸ் அணிக்காகவும், நியூசிலாந்தில் நடைபெற்ற தொடரில் சென்ட்ரல் ஸ்டேக்ஸ் அணிக்காகவும் விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. 39 வயதான மஹேல கடந்த காலங்களில் இங்கிலாந்தின் முதற்தர பிராந்திய கழகங்களான சசெக்ஸ் மற்றும் சமர்செட் அணிகளுக்காகவும் விளையாடியுள்ளார்.

இதுதொடர்பில் மஹேல கருத்து தெரிவிக்கையில், லங்கஷயர் அணியானது சிறப்பான வரலாற்றினைக் கொண்டிருக்கும் இங்கிலாந்து உள்ளூர் அணிகளில் ஒன்றாகும். இக்கழகத்தில் இளம் வீரர்களின் குழுவொன்று காணப்படுகின்றது. அவர்களுடன் இணைந்து செயற்பட கிடைத்த சந்தர்ப்பத்தினையும் இவ்வருடத்தின் கோடைகால டி20 ஆட்டத்தில் பங்கேற்பதினையும் மகிழ்வான ஒன்றாக கருதுகின்றேன் என கூறியிருந்தார். 2015ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெற்ற அவர், 149 டெஸ்ட் போட்டிகளில் களமிறங்கி, தனது துடுப்பாட்டத்தில் 12 ஆயிரம் டெஸ்ட் ஓட்டங்களையும், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட போட்டிகளில் 14 ஆயிரம் ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.



## ஈரானில் வசிக்கும் போலி மெஸ்சி

ஈரான் நாட்டில் ஆர்ஜென்டீனாவின் நட்சத்திர கால்பந்து வீரரான லியோனல் மெஸ்சி போலவே உருவம் கொண்ட ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆர்ஜென்டீனாவின் நட்சத்திர கால்பந்து வீரர் லியோனல் மெஸ்சி (29). சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை நான்கு முறை வென்று அசத்தியவர். அதுமட்டுமின்றி கால்பந்து உலகில் இவர் படைத்த சாதனைகள் ஏராளம். இதனால் இவருக்கு உலகம் முழுவதிலும் ரசிகர்கள் உள்ளனர். இந்நிலையில் ஈரானின் மாணவரான ரீசா பராதிஸ் என்பவர் கால்பந்து வீரர் மெஸ்சியை ஒத்த தோற்றத்தைக் கொண்டவர். இவர் மெஸ்சியைப்போலவே உள்ளதால், பலரும் இவருடன் செல்பி எடுக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். ஈரான் வீதிகளில் ரீசா பராதிஸ் நடந்து சென்றால், பொது மக்கள் இவரை சுற்றி வளைத்துக் கொள்கின்றனர்.

இதன் காரணமாக வீதிகளில் அதிக அளவில் வாகன நெருசல் ஏற்படுவதாக, அந்நாட்டு பொலிஸார் அவரை பலமுறை எச்சரித்துள்ளனர். ஆனால் அவரோ இதை கண்டுகொள்வது இல்லை. இதனால் பராதிஸை ஈரானிய பொலிஸார் கைது செய்து எச்சரித்து விடுவித்துள்ளனர்.

இந்நிலையில் கால்பந்து பிரியரான ரீசாவின் தகப்பனார், மெஸ்சி பார்சிலோனா அணிக்காக விளையாடும் 10ஆம் இலக்க ஜேர்சியை 25 வயதான தனது மகனுக்கு அனுப்பி, உலகின் பல்வேறு இணையத் தளங்களுக்கு அனுப்பி வருகின்றதை வழக்கமாகவும் கொண்டுள்ளார். இதன்காரணமாக பல ஊடகங்கள் அவரை தொடர்புகொண்டு ரீசாவுடன் நேரடி நேர்காணலொன்றுக்காக பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தற்போது அவர் ஈரானிய மெஸ்சி என்ற புனைப் பெயர் கொண்டு பலரால் அழைக்கப்பட்டு வருகின்றார். அத்துடன், அவர் கால்பந்து பிரியராக இருந்தாலும், கால்பந்து விளையாட்டில் ஈடுபடுவதில்லை. மேலும், மெஸ்சியின் சிகை அலங்காரம், தாடி போன்றவற்றை பின்பற்றி பார்சிலோனா அணியின் ஜேர்சியுடன் வெளியில் செல்வதை அவர் வழக்கமாக்கி கொண்டுள்ளதாக ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

என்னைத் தற்போது ஈரானிய மெஸ்சி என்றே அழைக்கின்றனர். மெஸ்சி செய்யும் அனைத்தையும் என்னைச் செய்யச்சொல்லி வலியுறுத்துகின்றனர். சில வேளைகளில் நான் புதிய இடங்களுக்குச் செல்லும் போது மக்கள் என்னைப் பார்த்து அதிர்ச்சியடைவதும் உண்டு. இது எனக்கு புதிய ஆற்றலை அளிக்கிறது என ரீசா தெரிவித்தார்.





இரசிகர்களுடன் செல்பி எடுத்துக்கொள்ளும் போலி மெஸ்சி..

சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடர்:

## ஒரு வாரகால தீவிர பயிற்சியில் இலங்கை வீரர்கள் பங்கேற்பு

பீ.எப்.எம் நிஷாட்

இங்கிலாந்தில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கட் தொடருக்கான பயிற்சி நடவடிக்கைகளை இலங்கை கிரிக்கெட் அணி ஆரம்பித்துள்ளது. நேற்று முதல் கண்டி - பல்லேகலை மைதானத்தில் ஒருவாரகால பயிற்சிகளை இலங்கை அணி வீரர்கள் ஆரம்பித்தனர்.

அதேநேரம் ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்க இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மெத்யூஸ், நேற்று நாடு திரும்பியதுடன், பயிற்சிகளிலும் இணைந்து கொண்டார்.

இந்நிலையில், இலங்கை அணி வீரர்கள், நேற்று காலை கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்து சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டு மகாநாயக்க தேரர்களின் ஆசிர்வாதத்தையும் பெற்றுக்கொண்டனர். குறிப்பாக, இலங்கை அணியின் களத்தடுப்பை பலப்படுத்துவது தொடர்பில் அணியின் பிரதான பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் மற்றும் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளர் நிக் போதஸ் ஆகியோர் முக்கிய அவதானம் செலுத்திவருவதாக தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்றிருக்கும் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளர் லசித் மாலிங்க, இலங்கை அணி இங்கிலாந்துக்கு பயணிக்கும் போது இணைந்துகொள்வார் என்று கிரிக்கெட் நிறுவன வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



இந்நிலையில், இந்த தொடருக்காக இலங்கை அணிக்கு வேகப்பந்து பயிற்சியளிக்க தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் அலன் டொனால்ட் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி சம்பியன் கிண்ண தொடரில் பங்கேற்க முன்னர் இங்கிலாந்தின் கென்ட் பிராந்தியத்தில் பயிற்சிப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி இங்கிலாந்து நோக்கி பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## Speed cricket சுற்றுப் போட்டி ஏறாவூர் யங் ஹீரோஸ் வெற்றி



கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் Speed cricket சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டத்தில் நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகத்துடன் மோதிய ஏறாவூர் யங் ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஏறாவூர் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இம்ரான் விளையாட்டுக் கழகம் 20 ஓவர் நிறைவில் 9 விக்கட்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங் ஹீரோஸ் அணி 18.5 ஓவரில் 4 விக்கட்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் யங் ஹீரோஸ் அணியின் சார்பாக இறுதிவரை களத்தில் நின்று 49 பந்துகளில் 80 ஓட்டங்களைப் பெற்ற இஸ்மத் அஸ்கான், அவ்வணியின் வெற்றியை உறுதி செய்து ஆட்ட நாயகனாகவும் தெரிவானார்.

## மரடோனாவுக்கு பயிற்றுனர் பதவி



கால்பந்து அரங்கில் 5 வருட ஓய்வின் பின்னர் ஐக்கிய அரபு அமீரகத்தின் 2ஆம் பிரிவு கால்பந்து கழகமான அல்-புஜைரா அணியின் தலைமை பயிற்சியாளராக ஆர்ஜென்டீனா கால்பந்து அணியின் முன்னாள் தலைவர் டியாகோ மரடோனா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக, அல்-ஃபுஜைரா கால்பந்து கழகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட செய்தி குறிப்பில், மரடோனா தமது அணியின் புதிய பயிற்சியாளர் எனவும், சிவப்பு மற்றும் வெள்ளை நிற மேல் சட்டையுடன், மரடோனா காட்சியளிக்கும் புகைப்படமும் இடம்பெற்றுள்ளது.

## பாக். வீரருக்கு அழைப்பாணை

பாகிஸ்தான் கிரிக்கட் அணியின் சகலதுறை ஆட்டவீரர் மொஹமட் நவாஸிற்கு பாகிஸ்தான் கிரிக்கட் சபை அழைப்பாணை விடுத்துள்ளது. பாகிஸ்தான் சுப்பர் லீக் கிரிக்கட் தொடரில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளின் ஒருபகுதியாக பாகிஸ்தான் கிரிக்கட் சபையின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் ஆஜராகுமாறு மொஹமட் நவாஸிற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் இரண்டாம் தொடரில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆய்வு செய்து வருகின்றது.

அதற்கேற்ப, ஷர்ஜீல் கான், காலித் லத்தீஃப், நசிர் ஜம்ஷெத் மற்றும் ஷாசிப் ஹசன் ஆகியோருக்கு எதிரான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். தொடர்: வீரர்கள் விலகல்!



10ஆவது ஐ.பி.எல் தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி நிறைவுக்கு வருகின்றது. பிளே-ஆப் சுற்றுக்குத் தகுதி பெற முக்கியமான சில ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. ஆனால் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்காகத் தீவிர பயிற்சி மேற்கொள்ள ஐபிஎல்-லில் இருந்து வெளிநாட்டு வீரர்கள் பலர் விலகியுள்ளனர்.

இதில் அதிகம் பாதிக்கப்பட்டது டெல்லி அணிதான். அந்த அணி வீரர்களான ரபடா, கிறிஸ் மொரிஸ், மெத்யூஸ் ஆகிய வீரர்கள் சாம்பியன்ஸ் கிண்ணத்தை முன்னிட்டு ஐபிஎல்-லில் இருந்து விலகியுள்ளார்கள்.

மீதமுள்ள மூன்று போட்டிகளையும் வெல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ள டெல்லி அணிக்கு இது மிகப்பெரிய பின்னடைவாக அமைந்துள்ளது.

இதற்கு முன்பு தென் ஆப்பிரிக்க வீரர் டு பிளெஸ்சி, இதே காரணங்களை முன்வைத்து புனே அணியை விட்டு விலகினார்.

இதில் குறிப்பாக தென்னாபிரிக்க அணி இங்கிலாந்தில் இம் மாதம் ( 24 - 29 ) 3 ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடவுள்ளது. அதேபோல இலங்கை அணி, ஸ்கொட்லாந்து அணியுடன் 2 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமான குழுநிலைப்போட்டிகளின் ஆண் மற்றும் பெண்களுக்கான எல்லே போட்டிகள் நேற்றுமுன்தினம் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் என்.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற ஆண்களுக்கான போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியை வீழ்த்தி, அம்பாறை மாவட்ட அணி வெற்றி பெற்று இம்முறை தேசிய போட்டிக்கு தெரிவானது. அம்பாறை மாவட்ட அணி சார்பாக பாலமுனை ரைஸ்ரார் விளையாட்டுக் கழகம் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில், பெண்களுக்கான இறுதிப் போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியை வீழ்த்தி மட்டக்களப்பு மாவட்ட அணி தேசிய போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டி நிகழ்வுகளுக்கு அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், மூத்த விளையாட்டு வீரர் ஹம்ஸா சஹூஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எஸ்.எம்.அறூஸ்)






கல்முனை பல்கோன் விளையாட்டுக்கழகம் ஒழுங்கு செய்திருந்த அணிக்கு 7 பேர் கொண்ட 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட், கல்முனை பீச் (அல்பலாஹ்) விளையாட்டு மைதானத்தில் கடந்த (5) வெள்ளிக்கிழமை கழகத்தின் தலைவர் ஆர்.ரிக்கான் தலைமையில் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் சாய்ந்தமருது நியுஸ்டார் விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்ட மாவடிப்பள்ளி விளையாட்டுக்கழகம் 5 விக்கெட்டினால் வெற்றி பெற்றது. இறுதிநாள் நிகழ்விற்கு அம்பாரை மாவட்ட தொலைபேசி வர்த்தக சங்கத்தின் தலைவரும் இக்ரா மொபைல் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளருமான யூ.எல்.அப்துல் சத்தார் பிரதம அதிதியாகவும், ஈ.வெஸ்ட் கெம்பஸ் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ. ஜௌபர் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு நினைவுச் சின்னங்களையும் மற்றும் பதக்கங்களையும் வழங்கிவைத்தனர். (யூ.கே. காலித்தீன்)

## உலகக்கிண்ண கடற்கரை கால்பந்து: சம்பியனானது பிரேசில்; ஈரானுக்கு மூன்றாமிடம்




பஹாமாஸின் நசவ் கடற்கரை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நிறைவுக்குவந்த உலகக்கிண்ண கடற்கரை கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் டஹிட்டி அணியை 6க்கு 0 என்ற கோல்கள் அடிப்படையில் வீழ்த்தி 5ஆவது முறையாகவும் பிரேசில் கால்பந்து அணி உலகக் கிண்ண கடற்கரை கால்பந்து தொடரின் சம்பியனாகத் தெரிவாகியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் சமபலத்துடன் விளையாடின. எனினும், போட்டியின் முதல் பாதியில் பிரேசில் அணி 2க்கு 0 என முன்னிலை பெற்றது. 2ஆவது பாதியிலும் சிறப்பாக விளையாடிய அவ்வணி 6க்கு 0 என்ற அடிப்படையில் டஹிட்டி அணியை வீழ்த்தி கடற்கரை கால்பந்து போட்டியில் 35ஆவது தொடர்ச்சியான வெற்றியையும் பதிவு செய்தது.

இதன்படி, பிரேசிரல் அணி 8 வருடங்களுக்குப் பிறகு கடற்கரை கால்பந்து சம்பியன் பட்டத்தை வென்றது. இந்நிலையில், இம்முறை கடற்கரை கால்பந்து தொடரில் சிறப்பாக விளையாடி 3ஆவது இடத்துக்கு இத்தாலி அணியுடன் போட்டியிட்ட ஈரான் அணி 5க்கு 3 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று, ஆசிய கால்பந்து வரலாற்றில் உலகக்கிண்ண கால்பந்து போட்டியொன்றில் 3ஆவது இடத்தைப் பெற்ற முதல் அணியாக ஈரான் வரலாறு படைத்தது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 10TH MAY 2017